# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/= | இதழ் - 40 | 18.10.2023




அனைவரையும் வறுமையிலிருந்து வெளியே கொண்டுவரும் செய்முறை 06

சொந்தத் தொழில் பெண்களுக்கு சமூகத்தில அந்தஸ்தையும் ... 12

சீன பொருளாதாரம் ஏன் தடுமாறுகிறது? 18

# இஸ்ரேல் – பலஸ்தீன யுத்தம் இலங்கையைப் பாதிக்குமா?

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# இஸ்ரேல் – பலஸ்தீன யுத்தம் இலங்கையைப் பாதிக்குமா?

**- பார்த்தீபன் -**

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் மீண்டும் ஆரம்பித்துள்ள போர் தொடர்வதற்கான அறிகுறிகளே காணப்படுகின்றன. இந்தப் போர் இலங்கையின் பொருளாதாரத்திலும் தாக்கங்களை ஏற்படுத்துமா? என்ற கேள்வி இன்று சாதாரண மக்களிடமும் எழுந்திருக்கின்றது. நிச்சயமாக உலக மயமாக்கப்பட்ட இன்றைய கால கட்டத்தில் இதன் தாக்கத்தை நாமும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதுதான் பொருளாதார ஆய்வாளர்களின் கருத்தாகவுள்ளது.

பலஸ்தீன - இஸ்ரேலிய யுத்தம் ஒரு சிக்கலான மற்றும் நீண்டகால மோதலாகும். இரு நாடுகளின் பொருளாதாரங்கள் மற்றும் ஒட்டுமொத்த பிராந்தியத்தின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை இந்தப் போர் ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய எண்ணெய் விலைகள், வர்த்தகம் மற்றும் முதலீடுகள் போன்றவற்றின் தாக்கம் உட்பட இலங்கைப் பொருளாதாரத்திலும் இந்த யுத்தம் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்கள் பலவற்றை ஏற்படுத்தப் போகின்றது.

அவை தொடர்பாகவும், இதன் தாக்கங்களைக் குறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் எவ்வாறான உபாயங்களைக் கையாளலாம் என்பதையிட்டும் இந்த வாரம் சுருக்கமாகப் பார்ப்போம்.

### போரும் பொருளாதாரமும்

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையேயான போர் கடந்த வாரம் ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலுடன் தீவிரமடைந்திருக்கின்றது. இரு தரப்பினரும் வான்வழித் தாக்குதல்கள் மற்றும் ராக்கெட் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்த மோதல் ஏற்கனவே இரு நாடுகளின் பொருளாதாரத்திலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, மேலும் உலகப் பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்த யுத்தம் இலங்கையின் பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இலங்கை அரசாங்கம் இஸ்ரேல் மீது ஏற்கனவே இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளுக்குக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. 2020 பெப்ரவரியில் இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பலஸ்த்தீனப் பிரச்சினைக்குச் சமாதான முறையில் தீர்வொன்றைக் காணப்பதற்காக இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கத்துடனேயே இந்தக் கட்டுப்பாடுகளும் தடைகளும் விதிக்கப்பட்டன. இந்தத் தடை இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்கனவே தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியையும் அரசாங்கம் உயர்த்தியுள்ளது. இந்தத் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் இலங்கைக்கும் மத்திய கிழக்கு



நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீடுகளை பாதித்துள்ளன. இப்போது யுத்தம் மீண்டும் வெடித்துள்ளதால் இந்த நிலை மேலும் மோசமடையலாம்.

### எண்ணெய் விலை உயரும்?

போரினால் எண்ணெய் விலையும் உயரும் நிலை உள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் எண்ணெய் ஒரு முக்கிய இறக்குமதியாகும். எண்ணெய் விலை அதிகரிப்பு போக்குவரத்து மற்றும் பிற பொருட்கள் மற்றும் சேவைகளின் செலவுகள் அதிகரிக்க வழிவகுக்கும். இது இலங்கையின் பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன் பணவீக்கமும் அதிகரிக்க வழிவகுக்கும்.

கடந்த வருடம் உருவாகிய பொருளாதார நெருக்கடி இதன் மூலம் மேலும் தீவிரமடையும் வாய்ப்புக்களும் உள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எரிபொருட்களின் விலை உயர்வடையும் ஆபத்து இருப்பதைப் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது. எரிபொருட்களின் விலைகள் உயர்வடைவது பெரும்பாலான பொருட்கள், சேவைகளின் விலைகள் உயர்வடைவதற்கு வழிவகுக்கலாம்.

### சுற்றுலாத்துறைப் பாதிப்பு

சுற்றுலா இலங்கைக்கான அந்நிய செலாவணி வருமானத்தின் முக்கிய ஆதாரமாக உள்ளது. இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான போர் காரணமாக இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடையலாம்.

கடந்த காலங்களில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் குறிப்பிட்ட தொகையில் இலங்கைக்கு வருகை தருகின்றனர். 2020 இல் இலங்கை அரசாங்கம் இஸ்ரேலுடனான இறக்குமதி மற்றும் ஏற்றுமதியைத் தடை செய்ததன் பின்னர் இலங்கைக்கு வருகை தரும் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது.

இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் (SLTDA) படி, 2022 இல் இலங்கைக்கு வருகை தந்த இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,983 ஆகும். இது 2019 இல் இலங்கைக்கு வருகை தந்த 3,856 இஸ்ரேலியச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் இருந்து குறிப்பிடத்தக்க குறைவு ஆகும்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் நிலவும் மோதல்கள் மற்றும் கொவிட்-19 தொற்று உள்ளிட்ட பல காரணிகளால் இலங்கைக்கு வரும் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இலங்கைக்கு வருகை தரும் இஸ்ரேலியச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் முயற்சித்தது. இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளுக்கான சுற்றுலாத் தலமாக இலங்கையை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் செயற்பட்டு வந்தது. இந்தப் பின்னணியில் ஆரம்பித்துள்ள போர் அதனைப் பாதிக்கும்.

### முதலீட்டில் பாதிப்பு

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான யுத்தம் இலங்கைக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டைச் சீர்குலைக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. ஏனெனில், இலங்கை அரசாங்கம் இஸ்ரேல் மீது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு தடை உட்பட பல தடைகளை ஏற்கனவே விதித்துள்ளது. பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியையும் அரசாங்கம் உயர்த்தியுள்ளது. இவை வர்த்தகத் துறையிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான யுத்தம் இலங்கையில் பணவீக்கம் அதிகரிக்க வழிவகுக்கும். எண்ணெய் மற்றும் பிற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பதே இதற்குக் காரணம்.

### தொழில் வாய்ப்புப் பாதிப்பு

இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்கள் போரினால் கணிசமான அளவில் பாதிக்கப்படலாம். போரின் பொருளாதார பாதிப்பு காரணமாக இஸ்ரேலில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் தொழிலாளர்களை பணிநீக்கம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுவதால், இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு இந்த யுத்தம் வேலை இழப்புக்கு வழிவகுக்கும். இஸ்ரேலில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் யுத்த காலத்தில் வெளிநாட்டு ஊழியர்களை வேலைக்கு அமர்த்த தயங்கக்கூடும் என்பதால், போர் இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் வேலை கிடைப்பதை மேலும் கடினமாக்கலாம்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையிலான யுத்தம் இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்கள் மீதும் இலங்கையின் பொருளாதாரத்திலும் கணிசமான எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். போரின் காலம் மற்றும் தீவிரம், உலகப் பொருளாதாரத்தில் போரின் தாக்கம், போருக்கு இலங்கை அரசின் பதில் உள்ளிட்ட பல காரணிகளைப் பொறுத்துத் தாக்கத்தின் தீவிரம் அமையும்.

கடந்த வருடம் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்தே கணிசமான இலங்கையர்கள் இஸ்ரேலுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுச் சென்றார்கள்.

(21ஆம் பக்கம் பார்க்க)

**மின்மடல் :** tamilseconomy@gmail.com
**தொலைபேசி :** 0764438620

# ஆபத்தான போக்கு

மட்டக்களப்பு மயிலத்தமடு மேய்ச்சல் தரைகளிலிருந்து விரட்டப்பட்ட அப்பாவித் தமிழ்ப் பண்ணையாளர்களுக்கு நீதி கிடைக்கவும் அவர்களின் பூர்வீக மேய்ச்சல் தரைகள் மீளவும் அவர்களிடமே ஒப்படைக்கப்படவும் கோரி நடத்தப்படும் போராட்டம் இப்பத்திரிகை உங்கள் பார்வைக்குக் கிடைக்கும் போது ஒரு மாதத்தைத் தாண்டியிருக்கும்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை பாராளுமன்றத்தில் கிளப்பியிருந்தார்கள். உரிய அமைச்சர்களிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் கிடைக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு விஜயம் செய்த போதும், இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டது. ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

அழுத்தங்கள் அதிகமாக இருந்தமையால் தமிழ்ப் பண்ணையாளர்களின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். அந்தப் பேச்சுக்களின்போதும் தீர்வு எதுவும் முன்வைக்கப்படவில்லை. ஜனாதிபதி தன்னுடைய வழமையான பாணியில் பிரச்சினையிலிருந்து நழுவிச்சென்றார்.

இந்தப் பிரச்சினை வெறுமனே மயிலத்தமடு பண்ணையாளர்களின் பிரச்சினை மட்டுமல்ல. அரசியல் ரீதியாகப் பார்க்கும்போது இது ஒரு நில ஆக்கிரமிப்பு. குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் அதிகளவுக்குச் செறிவாக இருக்கும் மட்டக்களப்பின் சனத்தொகை விகிதாசாரத்தை மாற்றியமைப்பதற்கான திட்டம்.

இதற்கு பொருளாதாரப் பரிமாணம் ஒன்றும் உள்ளது. இங்குள்ள பண்ணையாளர்கள் மட்டக்களப்புக்கு மட்டும் பாலையும் பாற்பொருட்களையும் வழங்கவில்லை. முழு இலங்கைக்கும் அவை செல்கின்றன. இதன் மூலமாக அவர்களின் பொருளாதாரம் செழித்துள்ளது. அதனைச் சிங்களவர்களிடம் கொண்டு செல்வது மற்றொரு நோக்கம்.

சிங்களவர்கள் இந்தப் பகுதியை ஆக்கிரமித்திருப்பதால் சுமார் ஆயிரம் தமிழ்ப் பண்ணையாளர்கள் வாழ்வாதாரங்களை இழந்து குடும்பங்களுடன் வீதிக்கு வந்துள்ளார்கள். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீளவேண்டுமானால் உள்ளூர் உற்பத்தியை பெருக்க வேண்டும். அதற்கு கணிசமான பங்களிப்பை வழங்கியவர்கள் இவர்கள்.

இலங்கைக்கே பாலை வாரி வழங்கிய தமிழ் பண்ணையாளர்கள் இன்று நடு வீதிக்கு வந்து போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்றால் எங்கே பால் வரப் போகின்றது? எங்கே பால் உற்பத்தி அதிகரிக்கப்போகின்றது? “எனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும்” என்ற நிலையில்தான் சிங்களவர்கள் இன்று செயற்படுகின்றார்கள்.

இவர்கள் வீதிக்கு வந்திருப்பதாலும், சிங்களவர்களின் ஆக்கிரமிப்பாலும் நெற்செய்கையில் ஈடுபட முடியாத நிலையும் தமிழ்ப் பண்ணையாளருக்கு ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டம் பால் உற்பத்தியில் மட்டுமன்றி, நெற்செய்கையிலும் பிரதான இடத்தை வகிப்பது. இப்போது இவை இரண்டுமே பாதிக்கப்பட்டுள்ளதால், மட்டக்களப்பு மாவட்டம் ஆபத்தான ஒரு நிலையை நோக்கிச் செல்வது தவிர்க்கமுடியாததாகிறது.

# அன்புள்ள ஆசிரியருக்கு....



### பணவீக்கத்தின் பாதிப்பு

கடந்த வாரம் தமிழர் பொருண்மியம் வெளியிட்டிருந்த “பணவீக்கம் மக்களை எவ்வாறு பாதிக்கின்றது?” என்ற கட்டுரை சிறப்பாக இருந்தது. பணவீக்கத்தால் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைத் தெளிவாக விளக்கியிருக்கின்றது. நடைமுறை சார்ந்த இவ்வாறான பொருளாதாரக் கட்டுரைகள் மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெரிதும் உதவக்கூடியது. நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின் ஒரு பகுதிதான் இந்தப் பணவீக்கம். பணவீக்கம் தொடர்பில் அரசாங்கம் தவறான தகவல்களை வெளியிடுகின்றதா என்ற கேள்வி எழுவதையும் இந்தக் கட்டுரையைப் படிக்கும்போது எழுவதையும் தவிர்க்க முடியவில்லை. அதேபோல வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு மத்திய வங்கி தீர்மானித்தது ஏன்? என்ற கட்டுரையும் சிறப்பானதாக இருந்தது.

**எம்.மணிவண்ணன், யாழ்ப்பாணம்.**

●●●

### தாமதமாகும் கடன் தவணை

ஐ.எம்.எப். வழங்கும் கடனின் இரண்டாவது தவணைக் கொடுப்பனவு தாமதமாகலாம் என்ற தலைப்பில் சுவாமிநாதன் சர்மா கடந்த வாரம் எழுதியிருந்த கட்டுரை, பெருமளவு தகவல்களைத் தருவதாகவும், பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள உதவுவதாகவும் அமைந்திருந்தமை பாராட்டத்தக்கது. கடன் தவணை தாமதமாவதற்கான காரணத்தையும், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் கட்டுரையாளர் தெளிவாக விளக்கியிருந்தமை பொருளாதாரத்தை ஒரு பாடமாகப் படிக்கும் மாணவர்களுக்குப் பெருமளவுக்கு உதவுவதாக இருந்தது. இவ்வாறான கட்டுரைகளைத் தொடர்ந்தும் தாருங்கள்.

**பவதாரணி சுரேஷ், மட்டக்களப்பு**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1900 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 3800 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

--------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர் -** ------------------------------------------------
**முகவரி -** ------------------------------------------------
**தொலைபேசி இலக்கம் -** ----------------------------------
**சந்தாக் காலம் -** ------------------------------------------
**செலுத்திய தொகை -** ------------------------------------
**செலுத்திய திகதி -** -------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,57,550 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,71,800 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 200/= |
| உருளைக்கிழங்கு | - 220/= |
| பச்சைமிளகாய் | - 350/= |
| தக்காளி | - 200/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 140/= |
| கோவா | - 180/= |
| கரட் | - 260/= |
| பூசணி | - 80/= |
| புடோல் | - 100/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 280/= |
| பெரிய வெங்காயம் | - 250/= |
| பாகற்காய் | - 400/= |
| வெண்டக்காய் | - 120/= |
| கருணைக்கிழங்கு | - 100/= |
| பயற்றங்காய் | - 250/= |
| லீக்ஸ் | - 160/= |
| பீற்றூட் | - 140/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 150/= |
| போஞ்சி | - 400/= |



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி:-** பணக்காரர்கள் வரிசையில் இவ்வருடம் முதலாவது இடத்தைப் பெற்றிருப்பவர் யார்?

**சஞ்சிகா ராமேஸ்வரன்**
**மருதனார்மடம்.**

**பதில் -** அமெரிக்க வணிக சஞ்சிகையான ஃபோர்ப்ஸ் வருடா வருடம் உலக பில்லியனாதிபதிகளைக் கண்டுபிடித்து பட்டியலிடுவது வழக்கம். அதிலிருந்து பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இணையத்தளம் ஒன்று கீழேயுள்ள தகவலை வெளியிட்டுள்ளது.

பிரஞ்சு வணிகரான பேர்ணா ஜான் ஆர்ணோ $211 பில்லியன்களைக் காட்டி முதலாமிடத்தை எட்டியிருக்கிறார். உலகின் அதி பெரிய ஆடம்பரப் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனத்துக்கு இவர் அதிபர். இவ்வருட பட்டியலில் $200 பில்லிய னைத் தாண்டியவர் இவர் ஒருவரே. உலகின் 75 க்கும் மேற்பட்ட ஆடம்பர அலங்காரப் பொருட்கள் இவரது நிறுவனத்துக்குரியவை. அடுத்த தடவை நீங்கள் Sephora விலோ அல்லது Louis Vuitton இலோ பொருட்களை வாங்கினால் இவரது சொத்து $300 பில்லியனையும் தாண்டலாம். 74 வயதுடைய ஆணோ சென்ற வருடம் $158 பில்லியன்களோடு மூன்றாமிடத்தில் இருந்தார்.

பாவம் இலான் மஸ்க். சென்ற வருடம் முதலாவது நிலையிலிருந்தவர் 'ஓ' ஐ (முன்னாள் ருவிட்டர்) வாங்கியவுடன் ex ஆகிவிட்டார். பட்சி பணத்தைத் திருடிக் கொண்டு பறந்துவிட்டது. $180 பில்லியன்களோடு இரண்டாமிடத்தில் குந்தியிருக்கிறார்.

இவ்வருடப் பில்லியனாதிபதிகளின் பட்டியலில் இடம்பெற்றவர்களில் பாதிப் பேருக்கு மேல் சென்ற வருடத்தில் இருந்ததைவிட ஏழைகளாகப் போய்விட்டார்கள் என்பது வருத்தம் தரும் செய்தி. அதானியும் அம்பானியும் எங்க நிற்கினம்?

மூக்கேஷ் அம்பானி $83.4 பில்லியன்களைச் சுருட்டிக்கொண்டு 9 ஆவது இடத்தில் இருக்கிறார். அது சரி யார் அந்த அதானி? டொணால்ட் ட்றம்பிடம் அக்கவுண்டிங்க் பழகிய அந்தப் பையனா? கணக்குப் புத்தகங்களில் திடீரெனத் தானாக இலக்கங்கள் முளைக்கும் வித்தையைச் சரிவரக் கையாண்ட அந்தப் பையன் இப்போது விலாசமில்லாமல் போய்விட்டான். பாவம் மோடிஜியால் கூட எதையும் பண்ண முடியவில்லை. இப்போ அவன் ford டுகள் கட்டுகிறானா அல்லது பழைய சைக்கிளில் food delivery செய்கிறானா தெரியவில்லை. பார்த்தவர்கள் சொல்லுங்கள்.

றொபின் ஹூட்டின் வில்லனான கோவிட் ஏழைகளிடமிருந்து பணத்தைப் பிடுங்கி பணக்காரருக்குக் கொடுத்துவிட்டுப் போய்விட்டது. அதில் பெரும்பான்மை அரசாங்கங்களின் பணம் தானே என்பதால் பலர் கவலைப்படாமல் இருந்திருக்கலாம். பங்குச் சந்தைகள் ஓஹோ என்று ஓடியதால் 2022 ஆம் ஆண்டு பில்லியனாதிபதிகளுக்குச் சிரிப்பு கொஞ்சம் அதிகம். 2023 இல் நிலைமை வேறு. கோவிட்டை நம்பிய அரசியல்வாதிகளுடன் சில பில்லியனாதிபதிகளும் அள்ளுப்பட்டு விட்டார்கள்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 202/= |
| கனடா டொலர் - | 233/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 336/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 232/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 350/= |
| அமெரிக்க டொலர் - | 318/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 213/= |
| கனடா டொலர் - | 243/= |
| சீன யுவான் - | 46/= |
| யுரோ - | 351/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 243/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 407/= |
| சுவிஸ் பிராங் - | 368/= |
| அமெரிக்க டொலர் - | 329/= |




# அனைவரையும் வறுமையிலிருந்து வெளியே கொண்டுவரும் செய்முறை

டிஜிட்டல் வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு நேரடி ஆதரவு என்ற இந்தியப் பிரதமர் மோடியின் கொள்கையால் பலனடைந்தீர்களா? என்று சில வாரங்களுக்கு முன்பு இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் பழங்குடியின மக்கள் குழுவிடம் கேட்டபோது அனைவரது கைகளும் உயர்ந்தன.

பலர் அரசாங்க ஆதரவுடன் கட்டப்பட்ட கழிப்பறைகள் மற்றும் வீடுகளைப் பெருமையுடன் என்னிடம் காண்பித்தார்கள். அதற்கான பணம் டிஜிட்டல் கணக்குகளில் தவணைகளாக வருகிறது - ஆரம்பத்தில் மூன்றிலொரு பங்கும், பின்னர் இரண்டாவது தவணை, வழங்கப்படுகிறது. கிராமத் தலைவர்களின் உறுதிப்படுத்தல் மூலம் வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக ஆவணப்படுத்தும் போது இறுதிக் கட்டணம் வழங்கப்படுகின்றது. இதனால் இடைத்தரகர்கள் வருமானத்தை ஈட்ட முடியாது.

மத்தியப் பிரதேசம் இந்தியாவின் ஏழ்மையான மாநிலங்களில் ஒன்றாகும். அங்குள்ள பழங்குடி மக்கள் இந்தியாவின் மிகவும் பின்தங்கியவர்களுள் ஒரு குழுவினராக உள்ளனர்,

உலகில் இந்தியாவை விட வேறு எங்கும் மக்கள் வறுமையில் இருந்து மீண்டு வெளியே வரவில்லை. அவர்கள் மாநிலத்தின் 7சதவீதமான வளர்ச்சிக்கு உதவுகின்றார்கள். கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்படுகிறது. இதனால் இந்தியா தீவிர வறுமையை ஒழிக்கும் நாடுகளில் ஒன்றாக விளிம்பில் உள்ளது.

இந்த மாற்றமானது, இந்திய ஏழைகள் மின்சாரக் கார்களையோ, மலைகளில் உள்ள விசேட விடுதிகளையோ, விலை உயர்ந்த கடிகாரங்களையோ வாங்க முடியும் என்று அர்த்தப்படுத்துவதாக இல்லை.

ஆனால் கடந்த காலத்தில் ஒரு நாளைக்கு 2.5 டொலர்களில் வாழ்ந்தார்கள் என்றால் இப்போது 5டொலர்கள் வருமானம் ஈட்ட முடியும். இதனால், நீங்கள் வாரத்திற்கு சில முறை கொஞ்சம் இறைச்சி சாப்பிடலாம், உங்கள் குழந்தைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பலாம் மற்றும் கைத்தொலைபேசி வாங்கலாம். ஒருவேளை கொஞ்சம் ஆடம்பரமாக இருக்கலாம். புடவையா? சில அழகுசாதனப் பொருட்களா? என்பது வேறுவிடயம்.

பிரேசிலின் ஜனாதிபதி லூலா, வறுமையின் தனிப்பட்ட அனுபவத்தைக் கொண்ட உலகத் தலைவராக உள்ளார், அவர் வறுமையை நன்கு புரிந்து கொண்டுள்ளார். “ஏழை மக்கள் ஆடம்பரத்தை விரும்புகிறார்கள்: அறிவுஜீவிகள் மட்டுமே ஆடம்பரத்தை வெறுக்கிறார்கள்“ என்றார்.

இந்தியா இப்போது கடந்த காலத்தில் வறுமையை ஒழிப்பதற்காக ஏனையவர்கள் பயணித்த பாதையை பின்பற்றுகிறது. உலகில் வறுமை ஒழிப்புச் செயற்பாடானது, ஐக்கிய இராச்சியத்தில் ஆரம்பித்து ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான், கொரியா மற்றும் அண்மைக்காலத்தில் சீனாவில் முன்னெடுக்கப்பட்டது. சீனாவைப் பொறுத்தவரையில், 1.4 பில்லியன் மக்களை வறுமையில் இருந்து மீட்கப்பட்டமையை கொண்டாடுகின்றது. உலகில் சீனாவைப் போன்று எந்தவொரு நாட்டிலும் ஏழை மக்கள் மிக விரைவாக நடுத்தர வர்க்கத்தினருக்குள் நகர்த்தப்படவில்லை.

**செழிப்புக்கு ஒரே வழி**

சில சமயங்களில் ஐ.நா. நிபுணர்களும் மற்றவர்களும் ஏழ்மையிலிருந்து விடுபட பல வழிகள் இருப்பதாக என்னிடம் கூறியிருப்பதைக் கேட்டுள்ளேன். அந்தச் செயற்பாடுகள் அனைத்தும் எதிர்காலத்திற்கு சொந்தமானமை. வரலாற்றில், பதிவுசெய்யப்பட்டுள்ளதன் பிரகாரம், செழுமைக்கான ஒரேவழி பொறுப்பான முதலாளித்துவம் அல்லது மாநில முதலாளித்துவம் என்று அழைக்கலாம். அடிமைத்தனம், நிலப்பிரபுத்துவம், சிறிய அளவிலான கிராமப்புற வளர்ச்சி என்பன ஒருபோதும் நடைமுறை வெற்றிகளை அளிக்கவில்லை.

(09ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்




## classified advertisement

### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...
தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட
0777 27 69 49 | 076 443 8622
#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

## classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

---

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

---

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

---

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

---

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

---

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

---

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

---

### காணி விற்பனைக்கு

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

---

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

---

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

---

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

---

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

---

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

---

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

---

### கல்வி

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

---

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. - 0772469113

---

வன்னி கல்லூரி கிளிநொச்சியில் இலகுவழியில் ஜெர்மன் மொழி A1 பரீட்சைக்கான இலகுவான முறையில் தயார்படுத்தல் இடம்பெறுகின்றது. தொடர்புகளுக்கு - 0769395457

---

கிளிநொச்சியில் ஆரிக்கலையினைக் கற்றுக் கொள்வதோடு உங்களுக்குத் தேவையான (design) ஆடைகளுக்கு ஆரிவேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 0769395457





(06ஆம் பக்கத் தொடர்ச்சி)
நவீனத்துவத்திற்கு முன்னராக, முதலாளித்துவத்திற்கு முன்னராகக் கிட்டத்தட்ட எல்லா மனிதர்களும் ஏழைகளாகவே இருந்தனர். 1870 வரை, அனைத்து மனிதர்களில் 70சதவீதமானவர்கள் நோய் வாய்ப்பட்டு, கல்வியறிவற்று வறுமையில் வாழ்ந்தனர். 80 ஆண்டுகளுக்கு முன்பு, சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு ஜாம்பவான்கள் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொண்டபோது, அந்நாட்டுப் பிரஜைகளின் ஆயுட்காலம் சுமார் 30ஆக இருந்தது, 20சதவீதத்துக்கும் குறைவானவர்கள் கற்கக் கூடியவர்களாக இருந்தபோதும் அவர்கள் முதிர்ச்சி வயதுக்கு முன்பே இறந்தனர். தற்போது சீன பிரஜைகளின் ஆயுட்காலம் 78சதவீதமாக உள்ளது, அது அமெரிக்காவையும் விட உயர்வானதாகும். இந்தியாவின் ஆயுட்காலம் விரைவில் 70ஐ தொடவுள்ளது.

நவீன தொழில் மற்றும் அறிவியலுக்கு முன்பு, உலகளாவிய செல்வத்தை உருவாக்குவதற்கான கொள்கைகள் எவையும் காணப்படவில்லை. ரோம் பேரரசர் ஒகஸ்ட், சீனாவின் டாங் டைசோங் போன்ற ஆட்சியாளர்களின் காலத்தில் மிகப்பெரிய தலைவர்கள் தங்கள் மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்க விரும்பியிருந்தாலும், அதைச் செய்வதற்கான கொள்கைகளோ கருவிகளோ வளங்களோ அவர்களிடம் இல்லை.

சமுதாயத்தில் உயரடுக்கினர் சாதாரணமான மக்களை விட அதிகமாக நுகர்ந்தனர், ஆனால் சதாரணமானவாகள் பெரும்பான்மையினராக இருந்தபோதும் அவர்களை உயர்த்தும் அளவுக்கு வளங்கள் ஒருபோதும் காணப்பட்டிருக்கவில்லை.

ஆனால் சாதாரண மக்களையும் வறுமையிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கான உலகளாவிய வெற்றிச் செயன்முறை காணப்படுகிறது: வலுவான வளர்ச்சி சார்ந்த மாநிலம், புதுமையான வணிகத்துடன் கூடிய துடிப்பான சந்தை மற்றும் கல்வியில் உறுதியான கவனம் என்பதே அதுவாகும்.

### கிழக்காசிய அதிசயப் பொருளாதாரங்கள்

ஜப்பான், கொரியா, சீனா மற்றும் வியட்நாம் போன்ற அனைத்து கிழக்காசிய நாடுகளின் அதிசயப் பொருளாதாரங்களும் மக்களை மேம்படுத்துவதை விரும்பும் தலைவர்களைக் கொண்ட வலுவான மாநிலங்களைக் கொண்டுள்ளன.

978க்கு முன்னதாக சீனாவும், 1992க்கு முன்னதாக இந்தியாவும் புள்ளிவிபரத்தின் மீது நம்பிக்கை கொண்டமையால் அவர்கள் தோல்வியடைந்து மக்களை வறுமையில் தள்ளினார்கள். இதனால் தனியார் வணிகம் மட்டுமே மக்களை செழிப்பிற்கு கொண்டு வரமுடியும் என்ற நிலைமை உருவாகியது.

ஜப்பான் டொயோட்டா மற்றும் மிட்சுபிஷி ஆகிய நிறுவனங்களை உருவாக்கியது, கொரியா சாம்சங் மற்றும் ஹுண்டாய் ஆகிய நிறுவனங்களை உருவாக்கியது. சீன வணிகங்கள் இப்போது உலகளாவிய மதிப்புமிக்க விற்பனைச் சங்கிலிச் சந்தைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

மேலும் அனைத்து கிழக்காசிய நாடுகளும் கல்விக்கு முதலிடம் கொடுக்கின்றன. வேகமாக வளரும் வியட்நாம் இப்போது ஐரோப்பா அல்லது வட அமெரிக்காவை விட 15வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கட்டாயக் கல்வி சிறந்த முடிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

உலகளாவிய வளர்ச்சியின் வெற்றிக்கு பெரிய தடையாக இருப்பது செயலிழந்த உலகளாவிய வளர்ச்சி அமைப்பாகும். அதாவது அவ்வமைப்புக்கள் உதவிகளில் தான் அதிகமான கவனம் செலுத்துகின்றன, வர்த்தகம், வணிகம் மற்றும் அரசியல் தலைமை ஆகியவற்றை அவை கணக்கில் கொள்வதில்லை.

எந்த ஆபிரிக்க நாட்டிலும் பொருளாதாரத்தில் 5சதவீதமளவிற்கு அளவுக்கு உதவிகள் இல்லை. வளரும் நாடுகளில் 98.5சதவீதமான கல்விக்கு அந்த மாநிலத்தின் வரி செலுத்துவோர் அல்லது மாணவர்களின் குடும்பங்களால் நிதியளிக்கப்படுகிறது. இருப்பினும், நல்ல உள்நாட்டுக் கொள்கைகள் மற்றும் வளர்ந்து வரும் வணிகத்தை விட, உதவி மற்றும் ஐ.நா. தான் வளர்ச்சியைக் கொண்டுவரவேண்டும் என்று உரையாடும் பல சர்வதேச மன்றங்களில் நான் கலந்துகொண்டேன்.

கடுமையான வறுமையை ஒழிப்பதில் இந்தியா விளிம்புநிலையை அடைந்து வருவதால், வறுமை மேலும் மேலும் ஆபிரிக்கவை மையப்படுத்தியுள்ளது. ஆனால் யதார்த்தம் எப்போதும் அப்படியில்லை. 50 ஆண்டுகளுக்கு முன்பு, ஏழ்மை பற்றிய எந்த விவாதத்திலும் கவனம் செலுத்திய கண்டமாக ஆசியா இருந்தது. இப்போது கிட்டத்தட்ட அனைத்து ஆசிய நாடுகளும் நடுத்தர வருமான வரம்புக்குள் மாறிவிட்டன.

### ஆசியப் புலிகளின் அடிச்சுவடுகளை ஆபிரிக்கா எவ்வாறு பின்பற்ற முடியும்?

முதலாவதாக, செயற்படும் நிலைகள் முக்கியமானவை. அரசாங்கங்கள் அதற்கான பாதைகளை அமைக்க வேண்டும், சந்தைகளை ஒழுங்குபடுத்த வேண்டும், சட்டங்களை உருவாக்க வேண்டும், முதலீடுகளை ஈர்க்க வேண்டும் மற்றும் ஏழைகளுக்கு வருவாயை விநியோகிக்க வேண்டும்.

எளிமையாகச் சொன்னால் - ஒரு மாநிலம் இல்லாமல், வளர்ச்சி மிகவும் கடினம். வளர்ச்சி சார்ந்த மாநிலங்களை உருவாக்க எளிதான வழி இல்லை. இருப்பினும், ஆபிரிக்க அரசுகள் வெளிநாட்டு சக்திகள் அல்லது தலைவர்களை ஆதரிக்க வேண்டும். முக்கிய பிரச்சினை ஆளும் அமைப்பு முறையாகும். ஜனநாயகம் அல்லது அதிக சர்வாதிகாரம் இல்லாத வகையில் அது அமைய வேண்டும்.

வளர்ச்சியை மையமாகக் கொண்ட தலைவர்களின் கீழான வலுவான மாநிலங்கள்தான் அவசியமாகின்றன. ஆபிரிக்காவில் ருவாண்டா ஜனநாயக நாடாக இல்லை, ஆனால் ஜனாதிபதி ககாமேயின் அறிவார்ந்த தலைமையின் காரணமாக அது குறைந்த ஊழல் மற்றும் வேகமாக வளர்ந்து வரும் நாடாக இருக்கலாம். ஐரோப்பாவோ, ஜப்பானோ, கொரியாவோ அல்லது சீனாவோ அவற்றின் மிக முக்கியமான வளர்ச்சி கட்டங்களில் ஜனநாயகமாக இருக்கவில்லை. அப்படியிருக்கையில் மிகவும் ஏழ்மையான

(23ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY



புதன்கிழமை
18.10.2023




# “ஆன்லைன்” பாதுகாப்பு மசோதா சுதந்திரத்தின் மீதான தாக்குதலா?



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கையின் உத்தேச ஆன்லைன் பாதுகாப்பு சட்டம் மூலம் கருத்து சுதந்திரம், கருத்து மற்றும் தகவல் சுதந்திரத்தின் மீதான தாக்குதலாக இருக்கும் என சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிதாக முன்மொழியப்பட்ட ஆன்லைன் பாதுகாப்புச் சட்டம், அதன் தற்போதைய வடிவத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டால் சுதந் திரமான வெளிப்பாட்டை ஒடுக்குவதற்கு இலங்கையில் ஏற்கனவே சுருங்கி வரும் குடிமை இடத்தை (civic space) மேலும் ஒடுக்குவதற்கும் உதவும் என்று ICJ கவலை கொண்டுள்ளது என 29 செப்டம்பர் 2023 இல் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ICJன் அறிக்கையில், இந்த மசோதா ஒரு வெற்றிடத்தில் மதிப்பிடப்படக்கூடாது. மாறாக மனித உரிமைகளை அச்சுறுத்தும் தற்போதைய மற்றும் முன்மொழியப்பட்ட சட்டங்களுடன் இணைந்து படிக்கப்பட வேண்டும் என்று கருதுகின்றது. இத்தகைய சட்டங்களில் மிகவும் தவறாகப் பயன்படுத்தப்பட்ட ICCPR சட்டம் 2005, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA), புனர்வாழ்வுப் பணியகம் மற்றும் PTA க்கு மாற்றாக முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியவை அடங்கும்.

இந்த சட்ட அமைப்பு ஒன்றாக எடுத்துக் கொண்டால் சிவில் சமூகத்தை கட்டுப்படுத்தும் அடிப்படை சுதந்திரங்களைப் பயன்படுத்துவதில் கட்டுப்பட்டான விளைவை ஏற்படுத்துகின்றது, அதே நேரத்தில் பாதுகாப்பு அரசின் எல்லையை தேவையற்ற முறையில் விரிவுபடுத்துகின்றது.

### ஐஊஆது இன் முழு அறிக்கை:

புதிதாக முன்மொழியப்பட்ட ஆன்லைன் பாதுகாப்புச் சட்டம், அதன் தற்போதைய வடிவத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டால் சுதந்திரமான வெளிப்பாட்டை நசுக்குவதற்கும், இலங்கையில் ஏற்கனவே சுருங்கி வரும் குடிமை இடத்தை மேலும் சுருக்குவதற்கும் வழிவகுக்கலாம் என்று ICJ கவலை கொண்டுள்ளது.

18 செப்டம்பர் 2023 அன்று, பொதுப் பாதுகாப்பு அமைச்சு பொது மக்கள் உட்பட ஆன்லைன் தகவல்தொடர்பு உள்ளடக்கத்தை வியத்தகு முறையில் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் ”ஆன்லைன் பாதுகாப்பு” என்ற தலைப்பில் ஒரு மசோதாவை வெளியிட்டது.

இந்த மசோதாவின் பல விதிகள், தகவல் மற்றும் கருத்துச் சுதந்திரம் உட்பட நாட்டில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களைப் பயன்படுத்துவதைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று ICJ கருதுகிறது. ஆன்லைன் பாதுகாப்பு ஆணையகம் மற்றும் பிற நிபுணர்களின் அமைப்பு, நியமனம் மற்றும் செயற்பாடுகள், தண்டனைக்குரிய குற்றங்கள் மற்றும் தேவையற்ற மற்றும் நடுநிலையற்ற தண்டனைத் தடைகள் என குறிப்பிடப்படும் நடத்தையின் தெளிவற்ற மற்றும் மிகைப்படுத்தப்பட்ட வார்த்தைகள் ஆகியவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

”ஆன்லைன் வெறுப்பு-பேச்சு மற்றும் தவறான தகவல்களின் பரவலைக் கையாள வேண்டும், இந்த சட்டமூலம் அதன் வடிவமைப்பில் ஆழமான குறைபாடுகளைக் கொண்டுள்ளது மற்றும் கருத்துச் சுதந்திரத்தை நிலைநிறுத்தத் தவறிய இலங்கை அரசாங்கத்தின் துஷ்பிரயோகத்திற்குத்

திறந்திருக்கும்” என்று இயன் சீர்மேன் கூறினார். ICJ இன் சட்ட மற்றும் கொள்கை இயக்குனர்”அரசாங்கத்தின் நடத்தை மற்றும் பொதுக் கொள்கைகள் தொடர்பான முக்கியமான பொது விவாதத்தை அடக்குவதற்கு இது பயன்படுத்தப்படும் அபாயம் உள்ளது.” என்று அவர் மேலும் கூறினார். இந்த மசோதா ”ஆன்லைன் பாதுகாப்பு ஆணையத்தை” நிறுவும்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சட்டமூலத்தை உடனடியாக வாபஸ் பெறு மாறும், ‘சமூகத்தின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்’ சட்டமூலங்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட சகல பங்குதாரர்களுடனும் அர்த்தமுள்ள ஆலோசனைகளை மேற்கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளது.


உரிமைகளை கட்டுப்படுத்தும் எந்தவொரு மாநில நடவடிக்கைகளுக்கும் தேவையான சட்டபூர்வமான தன்மை, தேவை மற்றும் விகிதாசாரத்தின் கொள்கைகளை தற்போதைய வரைவு பின்பற்றத் தவறிவிட்டது. கருத்துச் சுதந்திரம், கருத்து மற்றும் தகவல் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைக் கடமைகளுக்கு ஏற்ப அது திரும்பப் பெறப்பட வேண்டும் அல்லது திருத்தப்பட வேண்டும். சீர்மேன் மேலும் கூறினார்.

இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 14 (1) (a) பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை உறுதி செய்கிறது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் பிரிவு 19, இலங்கை ஒரு கட்சியாக உள்ளது, கருத்து மற்றும் கருத்து சுதந்திரத்திற்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.

இலங்கை ஆன்லைன் பாதுகாப்பு மசோதாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறைபாடுகள்

- Experts ஆன்லைன் பாதுகாப்பு ஆணையம் மற்றும் நியமிக்கப்பட்ட நிபுணர்களின் பரந்த அளவிலான மற்றும் அதிகப்படியான பரந்த அதிகாரங்கள்

- குடியரசுத்தலைவரின் (the President) சொந்த விருப்பத்தின் பேரில் (பிரிவு 5) நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ‘ஆன்லைன் பாதுகாப்பு ஆணையம்’ அமைப்பதற்கு மசோதா வழங்குகிறது. இது இலங்கையில் உள்ள பிற கருத்தியல் ரீதியாக சுயாதீனமான ஆணைக் குழுக்களுக்கு முரணானது. நியமனங்கள் அல்லது நியமனம் மூலம் அரசியலமைப்பு பேரவையின் ஒப்புதல் தேவை. இந்த மசோதா, நியமனம் மற்றும் நீக்கம் ஆகிய இரண்டும் சம்பந்தப்பட்ட ஜனாதிபதிக்கு கட்டுப்பாடற்ற விருப்புரிமையை வழங்கும்.


THE GAZETTE OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

Part II of September 15, 2023

SUPPLEMENT

(Issued on 18.09.2023)

ONLINE SAFETY

A

BILL






- கமிஷனுக்கு பரந்த அளவிலான அதிகாரங்கள் வழங்கப்படும், அவற்றில் சில நீதித்துறையின் செயற்பாடுகளுக்குள் ஊடுருவுகின்றன. இது அடிப்படையில் உண்மையின் ஒரே நடுவராகச் செயற்படுகிறது மற்றும் தடைசெய்யப்பட்ட அல்லது தவறான அறிக்கையைத் தெரிவித்ததாகக் கூறப்படும் எந்தவொரு நபர், இணைய சேவை வழங்குநர் (ISP) அல்லது இணைய இடைத்தரகர்களுக்கு எதிராக அறிவிப்புகள் அல்லது உத்தரவுகளை வழங்குவதற்கு உரிமை உள்ளது. ஆணையம் இந்த முடிவை எடுக்கும் செயன்முறையை மசோதாவில் குறிப்பிடவில்லை.

- மேலும், இணையதளங்களைத் தடுப்பதற்கும், குறிப்பிட்ட ஆன்லைன் இடங்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்த ISPகளுக்கு அறிவுறுத்துவதற்கும் ஆணையத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது அரசியலமைப்பின் 14A மற்றும் சர்வதேச சட்டத்தின் பிரிவு 14A மூலம் பாதுகாக்கப்பட்ட தகவலுக்கான உரிமையைப் பயன்படுத்துவதில் அரசாங்கத்தின் தேவையற்ற மீறல் மற்றும் தணிக்கை மற்றும் அனுமதிக்க முடியாத வரம்புகளுக்கு வழிவகுக்கும்.

- மேலும் பிரிவு 37, விசாரணைகளில் காவல்துறை அதிகாரிகளுக்கு உதவ அமைச்சர் “நிபுணர்களை“ நியமிக்க அனுமதிக்கிறது. நிபுணர்கள் தனிப்பட்ட நபர்கள், அவர்கள் தேடுதல் நடைமுறைகளின் போது போலீஸ் அதிகாரிகளுடன் வரலாம். ஆனால் சப்-இன்ஸ்பெக்டரின் தரத்திற்கு மேல் உள்ள ஒரு போலீஸ் அதிகாரியால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் மீது ஒரு நபர் எந்த ஆவணங்கள் அல்லது சாதனத்தை ஒப்படைக்க வேண்டும். போக்குவரத்து தரவுகளை வழங்க வேண்டும். அல்லது வாய்வழியாக ஆய்வு செய்ய வேண்டும் (பிரிவு 37 (6)). கணக்கு காட்ட முடியாத மற்றும் இவ்வாறான மூன்றாம் தனியார் நபர்களின் கைகளில் இத்தகைய அதிகப்படியான அதிகாரங்கள் துஷ்பிரயோகத்திற்கான வழிகளை வழங்குகின்றன.

- ஆணையத்தின் முடிவுகள் அல்லது நடைமுறைகளை நீதித் துறை மீளாய்வு செய்வ தற்கு மசோதா வழங்கவில்லை. அதற்கு பதிலாக பிரிவு 49 ஆணைக் குழு, அதன் பணியாளர்கள் அல் லது 37வது பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட எந்தவொரு நிபுணரையும் நல்ல நம்பிக்கையுடன் செய்யப்படும் எந்தவொரு செயலுக்கும் அல்லது தவறுக்கும் நீதி மன்றத்திற்கு கொண்டு வரப்படாமல் பாதுகாக்க முயல்கிறது.

- தெளிவற்ற மற்றும் மிகையான குற்றங்கள் - மசோதாவின் குறிப்பாக சிக்கலான விடயம் குற்றங்களின் தெளிவற்ற மற்றும் பரந்த வரையறைகளின் விதிகள் ஆகும்.

- ICCPRஇன் பிரிவு 19(3) கருத்துச் சுதந்திரம் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்கலாம். ஆனால் இந்த கட்டுப்பாடுகள் சட்டத்தால் வழங்கப்பட வேண்டும் மற்றும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சட்டபூர்வமான நோக்கங்களில் ஒன்றிற்கு அவசியமானவை. அதாவது பாதுகாப்பு மற்றவர்களின் உரிமைகள் மற்றும் நற்பெயர்கள், தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு அல்லது பொது சுகாதாரம் அல்லது ஒழுக்கம், வரம்பு அளவீடு விகிதாச்சாரமாக இருக்க வேண்டும். நோக்கத்தை அடைய குறைந்தபட்ச கட்டுப்பாட்டு வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது. எந்தவொரு கட்டுப்பாட்டு நடவடிக்கையும் சட்டத்தால் வழங்கப்பட வேண்டும் என்பது அவர்கள் சட்டப்பூர்வக் கொள்கைக்கு இணங்க வேண்டும் என்பதாகும், இதன் மூலம் நபர்கள் தங்கள் நடத்தைக்கு இணங்குவதை அனுமதிக்கும் வகையில் சட்டம் துல்லியமாக கூறப்பட வேண்டும்.

- அதேபோன்று, இலங்கை அரசியலமைப்பின் 15(2)வது பிரிவு, இன மற்றும் மத நல்லிணக்கத்தின் நலன்களுக்காக அல்லது பாராளுமன்ற சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு அல்லது தூண்டுதல் தொடர்பாக சட்டத்தால் பரிந்துரைக்கப்படும் உரிமையை கட்டுப்படுத்துவதற்கான சாத்தியத்தை வழங்குவது ஒரு குற்றம்.

- இந்த வரைவுச் சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள தடைகள், ICCPR மற்றும் இலங்கை அரசியலமைப்பின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவை. ”தேசிய பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம் அல்லது பொது ஒழுங்கிற்கு அச்சுறுத்தல் அல்லது தவறான உணர்வுகளை ஊக்குவிக்கும் எந்தவொரு நபரும் மற்றும் பல்வேறு தரப்பு மக்களிடையே பகைமை, தவறான அறிக்கையைத் தொடர்புகொள்வதன் மூலம் ஒரு குற்றத்தைச் செய்கிறது” என பிரிவு 12 கூறுகிறது.

(22ஆம் பக்கம் பார்க்க)

# சொந்தத் தொழில் பெண்களுக்கு சமூகத்தில அந்தஸ்தையும் நம்பிக்கையையும் கொடுக்கின்றது

**நேர்கண்டவர் - ஞா.கவினி**

"ஒரு தொழிலில் நிலைத்து நிற்க வேண்டுமானால் அந்த தொழில் பற்றிய பூரண அறிவும் வாடிக்கையாளர்களின் தேவையை தேடி அறிதலும் மிகவும் முக்கியமாக இருக்கின்றது."

தற்கால பொருளாதார நிலவரத்திற்கு ஏற்ப உங்களுடைய குடும்பச் சுமைகளை குறைக்கும் பொருட்டு ஒவ்வொரு குடும்பத்திலும் தற்சார்பு வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாய் இருக்கிறது.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பழையில் துர்காபுரம் இன்னும் அழகிய கிராமத்தில்

தனது கனவுகளுக்கு வடிவம் கொடுப்பதோடு மட்டுமன்றி பெண்கள் வீட்டில் இருந்து கொண்டே பொருளாதாரத்தை ஈட்ட முடியும் என்று பலருக்கு உதாரணமாக இருக்கிறார் கேமமாதவன் ஜெருஷா.

கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாக தேனி வளர்ப்பிலும் மிளகாய் தூள் உற்பத்திகளிலும் ஒரு தனித்துவமான இடத்தை பிடித்திருக்கிறார் ஜெருஷா . சரியான அளவுகளில் சரியான பொருட்கள் சேர்க்கப்பட்டு,

எந்த கலப்படங்களுமற்ற இவரது மிளகாய் தூள் மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பை பெற்றிருக்கிறது.

தொழில் தொடங்கிய ஆரம்ப காலங்களில் அந்த பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக மிகவும் சிரமப்பட்டதோடு அவமானப்பட வேண்டியும் இருந்தது.

உள்ளூரில் உள்ள பல சரக்கு கடைகள் முதல் அயலவர்கள் வரை எல்லோருக்கும் எனது பொருட்களின் தரத்தை நிரூபித்து குறைந்த விலையில் பொருட்களை கொடுத்து எனது பொருட்களுக்கான விளம்பரத்தை பெற வேண்டி இருந்தது.

ஆனால் ஒரு கிலோ மிளகாய்த் தூளில் ஆரம்பித்த எனது பயணம் இன்று மாதத்தில் ஐம்பது ,அறுபது கிலோக்கள் மிளகாய் தூள் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் இருக்கிறது.





**கேமமாதவன் ஜெருசா**

உள்ளூரில் மாத்திரமன்றி இலங்கையின் பல மாவட்டங்களிலும் எனது மிளகாய் தூளிற்கான பலத்த கேள்வி இருக்கின்றது.

விளையாட்டு விளையாட்டாக ஆரம்பித்த இந்த தொழில் இப்போது விரிவடைந்து எனது குடும்ப பொருளாதாரத்திற்கு கை கொடுக்கின்றது.

ஒரு சொந்தத் தொழிலானது பெண்களுக்கு சமூகத்தில் ஒரு நல்ல அந்தஸ்தையும் தன்னம்பிக்கையையும் கொடுக்கிறது என்று நினைக்கிறேன்.

தொழிலை தொடங்கும் போது இது மிகவும் ஒரு கஷ்டமான காரியமாக இருந்தாலும் அது விரிவடைந்து செல்லும்போது அதற்கு பின்னால் இருக்கும் வெற்றிகளில் அந்த கஷ்டங்கள் அனைத்தும் காணாமல் போய்விடும்.

பெண்கள் தனித்து நின்று செயல்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் குடும்ப அங்கத்தவர்களும் சமூகத்தினரும் கை கொடுத்தால் எந்த ஒரு தொழிலிலும் வெற்றிகரமாக சாதிக்க முடியும்.

> **"சொந்தமாக ஒரு தொழிலை ஆரம்பிக்கும் போது ஆரம்பத்தில் பலவிதமான பிரச்சனைகள் வரும். ஆனாலும் அவற்றிற்கெல்லாம் வளர்ந்து போகாமல் நம்பிக்கையோடு தொழிலை தொடர்ந்து செய்ய வேண்டும். நாட்கள் போகப்போக எங்களுக்கும் எங்கள் மீதான நம்பிக்கை ஓடிக் கொண்டே போக வேண்டும்"**

கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைந்து வருகின்ற எனது தொழில் ஒரு காலத்தில் பலருக்கு வேலை வாய்ப்பை கொடுக்கின்ற ஒரு நிறுவன மயப்படுத்தப்பட்ட தொழிலாகவும்,

இந்த தொழிலோடு பலருக்கு உதவி செய்யக் கூடிய நிலையிலும் இருக்கும் என்று நம்புகிறேன்.

சின்னஞ்சிறு புள்ளியாக தெரிகின்ற வெற்றியின் கோடுகளை நோக்கி நாங்கள் நம்பிக்கையோடு ஓடத் தொடங்க வேண்டும். நாங்கள் செய்கின்ற தொழிலை சாதாரணமாக மதிப்பிடக்கூடாது.

எந்த தொழிலினை செய்தாலும் மனதிற்கு நிறைவாகவும் எங்களை சுற்றி இருப்பவர்களை கருத்தில் கொண்டும் செயல்பட வேண்டும்.

ஒரு சிறு புள்ளியாக தெரிந்த வெற்றி தான் ஒரு காலத்தில் நம்பிக்கைக்கீற்றாக எங்களுக்கு கை கொடுக்கும்.

பல அவமானங்களும் சோதனைகளும் தான் வெற்றிக்கான படிகள் என்று நம்புகிறேன்.

மிகச் சிறிய கிராமத்தில் நாங்கள் மெல்ல மெல்ல அடியெடுத்து வைக்கின்ற போது நிறைய அசோகரியங்களையும் கடந்து வர வேண்டி தான் இருக்கிறது.

ஆனாலும் அதனை எல்லாம் தாண்டி நல்ல உற்பத்தியை என்னை நம்பி இருக்கின்ற வாடிக்கையாளர்களுக்கு நான் வழங்குகின்றேன் என்கின்ற திருப்தி என்னை இந்த தொழிலை நோக்கி தொடர்ந்தோம் ஓட வைத்துக் கொண்டு இருக்கின்றது.



உண்மையிலேயே பெண்கள் தமது சொந்த காலில் நிற்பதற்கு பழகிக் கொள்ள வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

ஆனால் பெண்கள் சொந்த காலில் நிற்க வேண்டும் என்று நினைத்தால் நிறைய பிரச்சினைகளை கடக்க வேண்டியிருக்கிறது.

பல பெண்களுக்கு இத்தகைய சவால்கள் தொடர்ச்சியாக இருந்து கொண்டே இருக்கிறது வீட்டுப் பணிகளோடு மாத்திரம் நின்று விடாது சமூகத்தில் தன்னை ஒரு சிறந்த பெண்ணாக நிலைநாட்டிக் கொள்வதற்கு போராடுகின்ற பல பெண்களில் ஜெரூஷா ஒரு வெற்றிப் பெண்ணாக இருக்கிறார்.

சின்ன சிறியதாக தனது உற்பத்திக்கான இயந்திரங்களை தனது சொந்த உழைப்பில் கொள்வனவு செய்து இன்னும் தனது தொழிலை விருத்தி செய்வதில் ஆர்வம் கொண்டிருக்கிறார்.

சந்தைப்படுத்தல் பற்றி ஜெருஷாவிடம் வினாவிய போது...

எல்லோருக்கும் போல சந்தைப்படுத்தல் எனக்கும் ஒரு கஷ்டமான விடயமாக தான் இருந்தது. ஆனால் அங்கே கிடைக்கின்ற அவமானங்களும் நிராகரிப்புகளும் தான் எங்களை வெற்றியை நோக்கி இன்னும் இன்னும் ஓட வைக்கிறது.

பிரபலமான கம்பெனிகளின் உற்பத்தி பொருட்களோடு எங்களது உள்ளூர் உற்பத்திகள் போட்டி போட முடியவில்லை என்கின்ற கவலை எப்போதும் எனக்கு இருக்கின்றது. ஆனால் பிரபலமான கம்பெனிகளின் உற்பத்திகள் பொதியிடுதலில் தங்களை சிறப்பாக காட்டிக்கொண்டாலும் அவர்களுடைய உற்பத்திகளில் அவ்வளவு நாட்டமில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர். மிகச் சிறிய அளவில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் உள்ளூர் உற்பத்திகள் தங்களுடைய பிரதான உற்பத்தி பொருட்களை மிகத் தரமாகவும், தூய்மையாகவும், கலப்படம் இன்றியும் மக்களுக்கு நல்ல சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

சிறந்த உற்பத்தி பொருளுக்கு மேலாக, பொது இடுவதற்கான செலவு அதிகமாக இருக்கின்றது.

அதனால் தான் உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளில் மாத்திரம் அதிகம் அக்கறை கொள்கின்றனர்.

உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு தங்கள் உற்பத்தி மீதான நம்பிக்கை இருக்கின்றது. கவர்ச்சிக்காக பொதியிடவேண்டும் என்கின்ற தேவை இருந்தாலும், ஓரிரு தடவைகளிலேயே மக்கள் உற்பத்தி பொருளுக்கான வலிமையை கண்டறிந்து விடுகின்றனர்.

என்னதான் கவர்ச்சியாக விளம்பரங்களை செய்தாலும் சரியான உற்பத்திகள் இல்லாத இடத்தில் அவற்றிற்கு சிறந்த வாய்ப்புக்கள் கிடைக்கப் போவதில்லை.

எனக்கும் எனது உற்பத்திகளை விரிவு படுத்துவதோடு பொதியிடலை நேர்த்தியாக செய்ய வேண்டும் என்கின்ற அவா இருக்கின்றது.

ஆனால் அதற்கான பின்புலமும் முதலிடம் அதிகமாக இருப்பது ஒரு பெரிய சவால் தான்.

என்றாலும் தற்போது எனது பொருளுக்கான கேள்வி அதிகமாகிக் கொண்டே இருக்கின்றது .

அதனால் எனது உற்பத்தியை குறித்து நான் எப்போதும் பெருமிதம் அடைகி



றேன்.

சொந்தமாக ஒரு தொழிலை ஆரம்பிக்கும் போது ஆரம்பத்தில் பலவிதமான பிரச்சினைகள் வரும். ஆனாலும் அவற்றிற்கெல்லாம் வளர்ந்து போகாமல் நம்பிக்கையோடு தொழிலை தொடர்ந்து செய்ய வேண்டும். நாட்கள் போகப்போக எங்களுக்கும் எங்கள் மீதான நம்பிக்கை ஒடிக் கொண்டே போக வேண்டும். ஆரம்பத்தில் உங்களை நிராகரித்த இவர்கள் எல்லோரும் எங்கள் உற்பத்திகளை தேடி பெற்றுக் கொள்ளும் அளவிற்கு நாங்கள் எங்களைத்தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆனால் அனேக சிறு தொழில் முயற்சியாளர்கள் ஆரம்பத்தில் நேர்கின்ற இடையூறுகள், சவால்கள், அவமானங்கள் போன்றவற்றில் நிலைகுலைந்து தொழிலை கைவிட்டு செல்கின்ற நிலை காணப்படுகின்றது.

திடீரென இப்படியான ஒரு நிலை வருகின்ற போது அவர்களை கரம் கொடுப்பதற்கு அரசு சார்பற்ற நிறுவனங்கள் முன் வர வேண்டும்.

தற்போது சிறுகை தொழில் அபிவிருத்தி பிரிவு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, என்று பலதரப்பட்ட அரசு நிறுவனங்கள் எங்களோடு சேர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் பல சிறுதொழில் முயற்சியாளர்கள் இன்னும் அடையாளம் காணப்படாமல் தொழிலை விருத்தி செய்ய முடியாமல் இருக்கின்றனர்.

இவர்கள் தத்துமது பிரதேசங்களில் உள்ள

சிறு தொழில் அபிவிருத்தி பிரிவின் உத்தியோகத்தர்களோடு தொடர்பு கொண்டு தங்களது தொழிலை பதிவு செய்து ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

எங்களது தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை பொறுத்தவரை சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு வழி காட்டுவதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் பலவிதமான நடவடிக்கைகளை அவர்கள் எடுத்து வருகின்றனர். இப்படி ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றன. சிறு தொழிலை செய்ய ஆர்வமாய் இருப்பவர்களும் செய்து கொண்டிருப்பவர்களும் இவர்களை தொடர்பு கொள்ளலாம்.

இன்றைய பொருளாதார நிலையினை கருத்தில் கொண்டு நாங்கள் ஒவ்வொரு வரும் சொந்தமாக ஒரு சிறிய தொழிலை என்னும் செய்வதற்கு எங்களை பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும் எப்போதும் இறக்குமதி கலாச்சாரத்தில் தங்கி இருக்காமல் நுகர்வுப் பொருட்களை உள்ளூரிலேயே பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தரமாகவும், அதே நேரம் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்பவும் உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும்.

கொரோனா காலத்தில் ஏற்பட்ட இடர் நெருக்கடிகளை போன்று ஏதேனும் நெருக்கடிகள் எமக்கு ஏற்படும் என்று சொன்னால், நிவாரணங்களையோ அயல் நாடுகளையோ நம்பியிருக்காமல் எங்களுடைய வளவுகளுக்குள்ளும் எங்களுடைய ஊருக்குள்ளும் எங்களுடைய நாட்டிற்குள்ளும் நமது தேவைகளை நாமே பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய தற்சார்பு சிந்தனையை நாம் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார் சிறு தொழில் முயற்சியாளர் கேம மாதவன் ஜெருஷா.

# விதையும் விதைப்பும்

## எங்கள் வாழ்வும் வளமும்





- தமிழ்க்கவி -

“தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு”

இப்படி வாழ்ந்த ஒருகாலம் இருந்தது. அது போர்க் காலமும் அதற்கு முந்திய காலமும். ஊழல்களை கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலம். வீட்டுக்கு வீடு பசு மாடுகள் நிற்கும். பசுவில்லாத வாழ்க்கையே கிடையாது. கிராமத்து மக்களிடம் பசுவும் எருமைகளும் நிறைந்து கிடந்ததால் அவற்றை பேணவும் அவை மேய்வதற்கும் அவறந்றுக்கான குடிநீருக்கும், வழிவகைகள் செய்யப்பட்டிருந்தன.

நாட்டு மாடுகள் காலையில் பட்டியிலிருந்து திறந்து விட்டால் பகல் முழுதும் திறந்த வெளிகளில் வயிறார மேயும். அருகிலிருக்கும் ஆற்றிலோ குளத்திலோ தேவையான அளவுக்கு நீரைப் பருகிவிட்டு அவை கூட்டம் கூட்டமாக மர நிழல்களில் படுத்து இளைப்பாறுவதும் நடக்கும். அப்படியே வெய்யில் தாழ மீண்டும் எழுந்து மேய்வதுமாக நேரத்தைப் போக்கிவிட்டு மர நிழல்களிலோ, தெருக்களிலோ வெட்டைகண்ட இடத்தில் தூங்கிவிடுவார்கள். இதில் கறவையில் இருக்கும் மாடுகள்மட்டும் தமது கன்றுகளுக்கு பால் கொடுப்பதற்காக வீடுகளுக்கு செல்லும். சிலவற்றுக்கு அதுவும் சோம்பலாக இருக்கும் அவைகளை வீட்டுக்காரர்கள் தேடிச்சாய்த்துக் கொண்டுபோய் மாலைப் பாலையும் கறந்து பின் காலையிலும் பாலைக் கறந்து விட்டு பட்டியிலிருந்து வெளியே திறந்து விடுவார்கள்.

மாடுகள் இப்படி திறந்த வெளிகளில் போடும் சாணம் அப்படியே மழைவரும் போது நீரால் அடித்து செல்லப்பட்டு குளத்தில் விடப்படும். அதுமட்டுமல்ல குப்பை கூழங்களும் மழைநீரில் அள்ளுப்பட்டு குளத்தையே அடையும. இப்படி அடையும் கழிவுகளால்தான் குளத்து நீர் பசளை மிகுந்து காணப்படுகிறது. அறுவடைக்குப்பின் மாடுகள் அந்த வயல் வெளிகளில் மேயும் போதும் அவற்றின் சாணம் வயலில் நிறைகிறது. கால போக விதைப்புக்கான மழை புரட்டாசியில் ஆரம்பிக்கும் போது, கமார் வெடித்திருக்கும் வயல்களின் வெடிப்பின் ஊடாக இந்த முதல் எரு நிலத்தினுள் தன்னை மறைத்துக் கொள்ளும். அதன்பின் புழுதி விதைப்பாயின் தொடந்து உழவு செய்து மண்ணை எருவுடன் கலப்பார்கள். சேற்று விதைப்புத்தான் என்றால் அந்த முதல் உழவோடு லேசாக அறுகு படர இடமளிப்பார்கள். காரணம் பெருமழை பெய்தால் மண்ணை அரித்துச் செல்லாமல் புல்லை மேவி நீர் பாயும் மண் பசளையை இழக்காது.

மாடுகளின் சாணமும் சரி குப்பை கூளங்களும் சரி இவைதவிர ஊர் காடுகளிலும் கழிவிடங்களிலும் சேரும் இறந்த மிருகங்களின் இற்றுப்போன உடல்களாகட்டும் எல்லாமே புது வெள்ளத்தில் சேர்ந்து ஊரெங்கும் பயணித்து ஈற்றில் பள்ளம் நோக்கிச் சென்று குளத்தில் சேரும். அந்த பாதைவழியே புதிய நோய்க்கிருமிகளும் பயணித்து குளத்தையடைத்து செயலற்றுப் போகும். எனக்கு என் தந்தை சொன்ன தீபாவளியின் கதை நினைவுக்கு வருகிறது.

நரகாசுரன் இறந்த நாளாக நாம் கொண்டாடும் தீபாவளி என்பது, கல்வியறிவற்ற பழங்கால மனிதர்களுக்காக புனையப்பட்டதுதான். யாராவது நரகன் என்று பெயர் வைத்துக் கொள்வார்களா? அந்த அசுரன் ஒரு உருவகம்தான். புதிதாக மாரி மழை புரட்டாசி பதினைந்தின் பின்னராக ஆரம்பிக்கும். அதனைத் தொடர்ந்து மாரி காலம். புதுவெள்ளம் ஊர்களின் ஊடாக பயணிக்கும் போது அந்த வெள்ளத்தின் கிருமிகளால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை நோய் தாக்குவது அதிகமாக இருக்கும். அவற்றை எப்படி ஒவ்வொரு வீடாக சுத்தம் செய்து போக்க முடியும்? நாம் எமது வீட்டை கழுவும் போது கிருமிகள் பக்கத்து வீட்டில் போய் பதுங்கிக் கொள்ளும். பின் அவர்கள் சுத்தம் செய்யும்போது அவை மீண்டும் நமது வீட்டுக்கோ இல்லை ஏனைய வீடுகளிலோ சென்று பதுங்குமல்லவா?

ஒரே நாளில் சகல வீடுகளையும் சுத்தம் செய்து கழிவுகளை எரித்து போது மான அளவுக்கு ஊரை சுத்தமாக்கி நாமும் எண்ணைதேய்த்து முழுகி, நல்ல உணவுகளை உண்டு மகிழ்ச்சியாக உறவு கொண்டாடி உடலையும் உள்ளத்தையும் புதிதாக்கி விடுவோம். மேலும் ஊர் முழுதும் பட்டாசுகளைக் கொழுத்தி அந்த கந்தகப்புகையை பரப்பி வெளியேறும் கிருமிகளையும் அழித்து விளக்குகளை வரிசைவரிசையாக ஏற்றி ஒளியைப்பரப்பி இரவையும் பாது காப்பாக வைத்திருப்பதன் ரகசியம் இது தான். நோயை குறைக்க நரகாசுரனை



அழிக்க வேண்டும். அந்த அசுரனை அழிக்க மழை மேகம் வருகிறது. மழை மேகம் என்றால் கிருஷணம் என்றொரு பொருள் உண்டு தெரியுமோ? புராணக் கதைகளில் பொதிந்துள்ள ரகசியங்கள் மிக அதிகமப்பா. தீபாவளிக்கு மதச்சாயம் பூசியது தற்காலம்தான் அது சொந்த பாது காப்பு நாள் அவ்வளவுதான்.

பசுவின் சாணம் கிருமிநாசினி என நாம் வீடுமெழுகவும் நல்ல காரியங்கள் என்ற பெயரில் மக்கள் கூடும் இடங்களில் தரை மெழுகி கோலம் போடுவதையும் வழக்கமாக கொண்ருக்கிறோம். அதுமட்டு மல்ல. விளக்கின் அருகே ஒரு சாணத்தில் பிடித்த அல்லது மஞ்சளில் பிடித்த பிள்ளை யாரும் அதற்காகத்தான் காத்திருக்கிறார் கள் என்றால் வியப்பாக உள்ளதா?

இன்றைய மாஸ் எனப்படும் கடைத்தீன் உண்ணுகிற மாட்டின் சாணம் மனிதமலம் போல மணக்கிறது. புதிய நாட்டுமாட்டின் சாணத்தால் வீடு மெழுகியிருக்கும் பொது ஒரு சுகந்த மணம் வருமே அதை நுகர்ந்து பார்த்தவர்களுக்குத்தான் அதன் ரம்மியம் தெரியும். வீட்டுக்கு வீடு வருடாந்தம் பிரச வம் நடக்கும். அதே காலத்தையண்டிய தாக பசுவும் கன்று போடும். தாயின் பால் குறைந்தால் பசுவின்பால் குழந்தையை வளர்க்கும். எல்லா வீடுகளிலும் இதுதான் நியதி.

சுகாதார ஆசுப்பத்திரி என்று ஒன்றை ஊருக்கூர் நிறுவி பிள்ளை பெற்ற தாய் மாரை அழைத்து அவர்களது ஆரோக்கி யத்தை தாயையும் சேயையும் நிறை பார்த்து உறுதி செய்தபின் பிள்ளைகளுக்கு கரைத்து கொடுங்கள் என்று பால்மாப் பேணிகளைக் கொடுத்தார்கள். முற்றிலும் இலவசமாகத்தான். அப்போது என் பூட்டி என் தாயை கடிந்து கொண்டது எனக்கு இப்பவும் நினைவு இருக்கிறது " எடியே அவனுதுக்கை என்னத்தை கலந்திருக் கிறானோ கவனமடி பசுவிருக்க என்னத் துக்கு உதுகள்? நாளைக்கு பொடிக்கேதும் வந்திடப் போகுது"

அது ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தி இரண்டு அல்லது மூன்று என நினைக்கி றேன். அந்த பால்மா "கவ் அன் கேட்" சிவப்பு நிற வட்டப்பேணி அதில் முடிசூடிய ஒரு குழந்தையின் படம் இருக்கும். கொழு கொழென்று அழகிய குழந்தை. முதலில் அந்த பால்மாவை எப்படி கரைப்பது என்று வைத்தியசாலையில் சொல்லிக் கொடுத்த படி கரைத்து கொடுக்க, என் ஆறு மாத வயதுடைய தம்பிக்கு வயிற்றோட்டம் ஆரம் பித்தது. பிறகென்ன அதை நாங்கள் கைக ளில் கொட்டிக் கொட்டி நக்கியே முடித்தோம். அவை இலவசமாகவே கிடைத்தது. பின் னரும் இதேபோலதான் லக்டோசனும் வந்தது. அதுவும் இலவசமாகவே அந்த தாய் சேய் நல கிளினிக்கில் கிடைத்தது. இப்போது பெருந்தொகைப் பணத்திற்கு இவை விற்பனையாகின்றன.




இப்போது பாருங்கள். எமது மண்ணில் வீட்டுக்கு வீடு பசு வளர்க்க முடியாது. அவைகளுக்கான மேச்சற்றரவைகளை பெரிய பெரிய பணக்காரர்கள் ஆக்கிரமித்து

" பசுவின் சாணம் கிருமிநாசினி என நாம் வீடுமெழுகவும் நல்ல காரியங்கள் என்ற பெயரில் மக்கள் கூடும் இடங்களில் தரை மெழுகி கோலம் போடுவதையும் வழக்கமாக கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல. விளக்கின் அருகே ஒரு சாணத்தில் பிடித்த அல்லது மஞ்சளில் பிடித்த பிள்ளையாரும் அதற்காகத்தான் காத்திருக்கிறார்கள் என்றால் வியப்பாக உள்ளதா? "

மாடி மேல மாடி கட்டிக் கொண்டிருக்கிறார் கள். அரச அதிகாரிகள் இதனால் பெரும் லாபத்தை அடைகிறார்கள். அவர்களே இன்னுமின்னும் அகப்படும் அரச நிலங் களை சூறையாடுகிறார்கள்.

கொஞ்ச நஞ்சமும் வசதிகிடைத்து மாடு வளர்ப்போர் தமது மாடுகளிலிருந்து கறக்கும் பாலை உள்ளூர் பாவனையாளர்களுக்கு கொடுக்க மறுக்கிறார்கள். இருக்கும் இரண் டொரு பால் டிப்போக்களில் பாலை நூற்றி நாற்பது ரூபாவுக்கு கொள்வனவு செய்து. பாவனையாளர்களுக்கு இருநூறு ரூபா வுக்கு விற்பனை செய்கிறார்கள். நாடு எங்கே போய்க்கொண்டிருக்கிறது?



# தென்னை செய்கை மூலமாக அதிக பலன்பெறுவது எப்படி!

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



பல நாடுகளிலும் மேற்கொள்ளப்படுகின்ற பெருந்தோட்ட பயிர்ச் செய்கையில் தென்னைப்பயிர் செய்கைக்கு அந்த அந்த நாட்டு அரசு முக்கியத்துவம் கொடுக்கின்றது.

ஏன் இலங்கையிலும் கூட கடந்த காலங்களில் தென்னை பயிர்செய்கை ஊடாக எமது நாட்டிற்கு அதிக அந்நிய செலாவணி சம்பாத்தியத்தினை பெற்றுக் கொடுத்தது என்றால் அது மிகையாகாது. இரசாயனம் இல்லாமல் இயற்கை முறையில் தென்னங் கன்றுகளை நடுகை செய்வதே சிறந்ததாகும்.

இயற்கை முறையில் நடுகை பண்ணப்படும் தென்னங்கன்றுகளை பீடைகள் தாக்குவது குறைவாக இருக்கும்.

எமது முன்னோர்களும் இயற்கை முறையை பின்பற்றித்தான் மேட்டு நிலமாக இருந்தால் செப்டம்பரிலும் பள்ளகாணியாக இருந்தால் மார்ச், ஏப்ரலிலும். தென்னம் பிள்ளைகளை நடுகை செய்து இருக்கின்றார்கள்.

இதனால் தான் எந்த ஒரு பிரச்சனையும் அவர்கள் எதிர்நோக்கியது இல்லை.

பொதுவாக பண்ணையாளர்கள் தங்கள் இடத்திற்கு ஏற்ப நீர் கட்டமைப்பு சரியாக இருக்குமாக இருந்தால் ஆண்டு முழுவதும் தென்னம்பிள்ளைகளை நடுகை செய்யலாம்.

ஆனால் நீரூற்று அதிகம் உள்ள பள்ளமான நிலங்களில் தென்னம்பிள்ளை நடுகை செய்யக்கூடாது காரணம் சிறிய பிள்ளையாக இருக்கும்போதே விரைவில் வேர் அழுகி தென்னம்பிள்ளை இறந்து விடும்.

மேட்டு நிலங்களில் தயங்காமல் நடுகை செய்யலாம். தென்னங்கன்றினை எமது முன்னோர்கள் பிள்ளை என்று அழைத்த தற்கு காரணம்

எமது பிள்ளைகளை விட எம்மால் நடப்படும் தென்னம் பிள்ளைகள் எதிர்காலத்தில் அதாவது எங்களுடைய வயோதிப காலத்தில் எங்களை சிறப்பாக பார்க்கும் என்பதற்காக தான்.

தென்னை மரங்களைப் பொறுத்தவரை நாட்டினம், கலப்பினம், கலப்பினத்திலும் பல ரகங்கள் என உள்ளது. நாட்டினம் நீண்டகாலம்வரை காய்க்கக் கூடியதாகவும்.

கலப்பினத்திலும் 15 வருடம் வரை மற்றும் 30 வருடங்கள் என குறுகிய காலத்துக்கு மட்டும் காய்க்கக் கூடியதாகவும் இருக்கும்.

பொதுவாக தென்னம்பிள்ளை கற்கள் நிறைந்த நிலம், சதுப்பு நிலம் தவிருந்த அனைத்து நிலங்களிலும் வளரும் தன்மை உள்ளது அதிலும் குறிப்பாக செம்மண், மணல் மண் போன்ற இடங்களில் நன்றாக வளரும் தன்மை உள்ளது.

## நடுகைக்குரிய தென்னம் பிள்ளைகளை தேர்வு செய்யும் முறை

தென்னங்கன்றுகளை நடுகைக்கு தேர்வு செய்யும்போது குருத்து பகுதியை விட்டு மேலதிகமாக நான்கு அல்லது ஐந்து ஓலைகள் வந்த கன்றுகளை தேர்வு செய்ய வேண்டும்.

அதிலும் எங்களுடைய இடுப்பு உயரத்திற்கு வளர்ந்த கன்றுகளாக இருந்தால் போதும்.

குறிப்பாக 3 அடி வளர்ந்த கன்றுகளை தேர்வு செய்ய வேண்டும்.

நான்கு, ஐந்து அடி அல்லது அதற்கு மேல் வளர்ந்த கன்றுகளை தேர்வு செய்யக் கூடாது.

தென்னம் பிள்ளைகளின் அடிப்பகுதி ஒரு கையால் பொத்தி பிடிக்க கூடியவாறு அடி பெருத்து இருக்க வேண்டும்.

தென்னம் பிள்ளைகளின் அடிப்பகுதி மெலிதாக நீண்டு வளர்ந்திருக்கும் கன்றுகளை தேர்வு செய்யக்கூடாது.

தென்னங்கன்றுகளில் நீண்டகால எந்த ரகத்தை தேர்வு செய்தாலும். நடும் பொழுது 24 × 26 அடி என்ற இடைவெளியில் குழி தோண்ட வேண்டும்.

இந்த இடைவெளியிலும் குறைவாக

தென்னங்கன்றுகள் நட்டால் எதிர்காலத்தில் தென்னங்கன்றுகள் வளரும் வீதம் குறையும் அதாவது அடி பெருக்காமல் மெலிதாக வளரும்.

அதோடு காய்க்கும் வீதமும் குறையும்.

அதாவது பாலைகள் மெலிதாக இருக்கும். குரும்பட்டிகள் அதிகமாக பிடித்தாலும் பிறகு அதிக அளவில் குரும்பட்டிகள் உதிர ஆரம்பிக்கும்.

காலப்போக்கில் ஐந்து, ஆறு காய்கள்





மட்டுமே இருக்கும்.

கன்று நடுகைக்கு 3 × 3 × 3 அடி என்ற அளவில் குழி தோண்ட வேண்டும். முதல் 1 1/2 அடியில் தோண்டும் மண்ணை ஒருபக்கமும். அதற்கு கீழ் தோண்டும் 1 1/2 அடி மண்ணை இன்னொரு பக்கமும் போட வேண்டும். (இந்த குழியில் தோண்டப்படும் கீழ் மண்ணை மீண்டும் நடுகைக்கு பயன்ப டுத்தக் கூடாது)

பின்பு குழிக்குள் தேங்காய் உரித்த பொச்சி மட்டைகளை 3 அடுக்கில் தும்பு மேல்நோக்கி இருக்குமாறு பரப்பவேண் டும். இதற்கு மேல் ஒரு கை பிடி உப்புகல் எடுத்து தூவி விடவேண்டும்

பின்பு பொச்சிமட்டைக்கு மேல் 1 1/2 அடி கணத்தில் நாங்கள் வெட்டி வைத்த மேல் மண்ணுடன் மக்கிய உரம் அல்லது ஆட்டு எரு அல்லது கோழி எரு 10kg , அதோடு 2kg சாம்பல் கலந்த பின்பு மேல் கூறியவாறு பொச்சி மட்டைக்கு மேல் ஒன்றரை அடி கணத்திற்கு கலவையில் ஒரு பகுதியை போட வேண்டும்.

குறிப்பு

மேற்குறிப்பிட்ட கலவையில் மாட்டு எரு பயன்படுத்தக் கூடாது. காரணம் தென் னங்கன்றுகளை தாக் கக்கூடிய வண்டு கள் உற்பத்தியாக வாய்ப்பு உள்ளது.

இதன் பிறகு தென்னாங்கன்றை குழியின் மையத்தில் வைத்து மீதமுள்ள மேல் மண் கலவை அனைத்தையும் தென்னம் பிள்ளையை சுற்றியுள்ள குழிக்குள் போட வேண்டும்.

அதிலும் குறிப்பாக தேங்காயின் மேற் பகுதி சிறிது தெரியும்படி பரப்ப வேண்டும்.

மேற்கூறியவற்றை செய்த பின்பு. குழி முற்றாக நிரம்பி நில மட்டத்திற்கு சமமாக வந்துவிடும்

இதற்குமேல். தேங்காய் உரித்த பொச்சி மட்டைகளை ஒரு அடுக்கில்.

தும்பு பகுதி கீழ் நோக்கி இருக்குமாறு தென்னங்கன்றின் அடிப்பகுதியிலிருந்து 1½2 அடி தள்ளி மூடிய குழி தெரியாதபடி வட்ட வடிவில் பரப்பிவிடவேண்டும்.

இவ்வாறு செய்வதனால் குழியின் அடிப்பகுதியில் வைக்கப்பட்ட பொச்சி மட்டைகள் நீரினை உறிஞ்சி தக்க வைத் துக் கொள்ளவும்.

குழியின் மேற்பகுதியில் அடுக்கி வைத்த பொச்சி மட்டைகள் நீர் ஆவியாதலை தடுத்து குளிக்குள் எப்போதும் ஈரப்பதன் இருக்கும். இதனால் நீர் வீண்விரயம் ஆவது தடுக்கப்படும்.

எதிர்காலத்தில் சிறந்த விளைச்சலை கொடுக்கும். அதோடு தென்னங்கன்று சிறிது வளரும் வரை ஈரப்பதன் இருக்கு மாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இத் தென்னங்கன்றுகள் காய்க்கும் வரை ஒவ்வொரு வருடமும் மேலுரமாக மக்கிய உரம் அல்லது தொழு உரம் இட வேண்டும். தென்னம்பிள்ளைகள் காய் பிடிக்கும் வரை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பச்சை மட்டைகளை வெட்டக்கூடாது.

காரணம் தென்ன மட்டை வெட்டப்பட்ட பகுதியில் இருந்து வரும் ஒருவகை வாசத்தால் வண்டுகள் அவ்விடத்திற்கு கவர்ந்து இழுக்கப்படும்.

நாட்டு ரகமாக இருந்தால் 6 வருடத்தில் காய்க்க ஆரம்பிக்கும்.

கலப்பு ரகமாக இருந்தால் 4 1/2 வருடம், 3 1/2 வருடம் என ரகத்திற்கு ஏற்ப காய்க்க ஆரம்பிக்கும்.

எந்த ரகமாக இருந்தாலும் விரைவாக தென்னம்பிள்ளைகளை காய்க்க வைப்பதாக இருந்தால். அது எங்கள் பராமரிப்பில் மட்டுமே உள்ளது. நாட்டு ரகமாக இருந்தால் ஆண்டொன்றுக்கு 150 - 200 காய்கள் உற்பத்தி இருக்கும். இந்த உற்பத்தி 40 தொடக்கம் 50 வருடங்கள் வரை எமக்கு கிடைக்கும். கலப்பு ரகமாக இருந்தால் ஆண்டொன்றுக்கு 300 - 350 காய்கள் உற்பத்தி இருக்கும்.

இந்த உற்பத்தி ரகத்திற்கு ஏற்ப 10 தொடக்கம் 30 வருடங்கள் வரை எமக்கு கிடைக்கும். ஆரம்ப காலத்தை விட தற் பொழுது காலநிலை மாற்றம் மோசமாக உள்ளது இனி வரப்போகும் நாட்களும் அவ்வாறே இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஆகையால் எதிர்காலத்தில் இளநீர் தேவை அதிகளவில் இருக்கும் என்பதிலும் மாற்றுக் கருத்து இல்லை.

எமது நாடுகளில் மாத்திரம் அல்ல வெளிநாடுகளிலும் கூட தேங்காயாக இருக் கட்டும், இளனியாக இருக்கட்டும் சந்தை வாய்ப்பு அதிகமாகவே உள்ளது.

அதோடு தென்னை மரத்திலிருந்து வரும் அனைத்தும். மாற்று உற்பத்திக்கு பயன்படுத்தக்கூடிய பொருட்களாகவே இருக்கின்றது.

அவைகள் அனைத்தும் எமது அத்திய வசிய தேவைகளில் பயன்படுத்தக் கூடிய தாகவே இருக்கின்றது.

குறிப்பு

**முடிந்தவரை உங்கள் தென்னந் தோட் டங்களில் நீண்டகால பயிர்களை ஊடுபயி ராக நடுவதை தவிர்த்து ஆறு மாதத்திற்கு உட்பட்ட தானியங்கள் போன்ற குறுகிய காலப் பயிர்களை ஊடுபயிராக பயிரிட லாம்.**





- முகம்மது ரியாஸ் -

# சீன பொருளாதாரம் ஏன் தடுமாறுகிறது?

1991 - 2001 வரையிலான பத்தாண்டு காலகட்டத்தில் ஜப்பான் மிக மோசமான பொருளாதார மந்தநிலையை எதிர்கொண்டது. இந்தக் காலகட்டத்தை 'இழந்த சகாப்தம்' (Lost Decade) என்று அழைக்கிறார்கள். ஏனென்றால், அதற்கு முந்தைய பத்து ஆண்டுகளில், அமெரிக்கா உட்பட ஏனைய வளர்ந்த நாடுகள் பொறாமை கொள்ளும் அளவுக்கு ஜப்பானின் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தது. ஜப்பானின் இந்த வளர்ச்சிக்கு அதன் ரியல் எஸ்டேட் துறை மிக முக்கிய காரணமாக இருந்தது.

நிலப்பரப்பில் ஜப்பானைவிட அமெரிக்கா 25 மடங்கு பெரிய நாடு. ஆனால், 1980-களில் ஜப்பானின் மொத்த நில மதிப்பானது அமெரிக்காவின் மொத்த நில மதிப்பை விட 4 மடங்கு அதிகமாக இருந்தது. ரியல் எஸ்டேட் உச்சத்தில் இருந்ததால், ஜப்பான் வங்கிகள் கடனை வாரி இறைத்திருந்தன.

1980-களில் இறுதியில் ரியல் எஸ்டேட் துறை திடீர் தேக்கம் காணத் தொடங்கியது. ரியல் எஸ்டேட் துறை தேக்கத்தால், அதில் முதலீடு செய்த நிறுவனங்களும் மக்களும் இழப்பைச் சந்தித்தனர். ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு கடனை வாரி இறைத்த வங்கிகள் திவாலாகின. ஜப்பானின் இருண்ட காலம் தொடங்கியது.

1989 முதல் 1992 வரையிலான மூன்றே ஆண்டுகளில் ஜப்பானில் பங்குச் சந்தை 60 சதவீதம் வீழ்ச்சி அடைந்தது. ரியல் எஸ்டேட் மதிப்பு அடுத்த பத்து ஆண்டுகளில் 70 சதவீதம் அளவில் சரிந்தது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்த நிலையில் மக்கள் பணத்தை செலவு செய்யாமல் சேமித்து வைக்க ஆரம்பித்தனர். மக்களிடம் நுகர்வை தூண்டும் நோக்கில் ஜப்பான் அரசு அதன் வட்டி விகிதத்தை பூஜ்யம் வரையில் குறைத்தது. அதாவது வங்கியில் கடன் பெற்றால், அதற்கு வட்டி செலுத்தத் தேவையில்லை.

எனினும், மக்கள் வங்கியில் கடன் வாங்க முன்வரவில்லை. மக்களின் நுகர்வு குறைந்ததால் விலைவாசி வீழ்ந்தது. தொழிற் செயல்பாடுகள் முடங்கின. விளைவாக, நிறுவனங்கள் ஊழியர்களை பெரும் எண்ணிக்கையில் வேலைநீக்கம் செய்தன. இந்தப் பொருளாதார மந்தநிலை பத்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்தது.

ஒரு நாட்டின் ரியல் எஸ்டேட் துறை பெரும் உச்சத்துக்குச் சென்று, வீழ்ச்சி அடையும்போது ஜப்பானின் இந்த வரலாற்றை நினைவுகூர்வது வழக்கம். தற்போது சீனாவை மையப்படுத்தி ஜப்பானின் இந்த வரலாறு நினைவுகூரப்படுகிறது.

### தடுமாற்றத்தில் சீனா

கடந்த 20 ஆண்டுகளில் சீனா பொருளாதார ரீதியாக மிகப் பெரும் வளர்ச்சியை எட்டி, அமெரிக்காவுக்கு நிகரான நாடாக

> “உலக நாடுகளுடன் நேரடி வர்த்தகத்தை சாத்தியப்படுத்தும் வகையில் மாபெரும் உள்கட்டமைப்பு (Belt and Road Initiative) திட்டத்தை சீனா மேற்கொண்டு வருகிறது. இதற்காக ஆப்ரிக்கா, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட நிதி நெருக்கடியில் இருக்கும் நாடுகளுக்கு பெரும் தொகையை கடனாக வழங்கியுள்ளது. தற்போது அந்நாடுகளில் நிதி நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் அந்தக் கடன் திரும்பி வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.”

தன்னை நிலை நிறுத்திக்கொண்டுள்ளது. ஆனால், தற்போது சீனாவின் சாம்ராஜ்யத்துக்கு பெரும் சவால் வந்துள்ளது, ரியல் எஸ்டேட் துறை வழியாக.

சீனாவின் மொத்த ஜிடிபியில் ரியல் எஸ்டேட் துறை 30 சதவீதம் பங்கு வகிக்கிறது. அத்துறையில் சீனா மிகப் பெரிய அளவில் முதலீடு செய்துள்ளது. தற்போது அத்துறை பெரும் தேக்க நிலைக்கு உள்ளாகி இருக்கிறது.

பொதுவாக ஒரு நாட்டில் ரியல் எஸ்டேட் துறை பெரும் தேக்கத்தைச் சந்திக்கும் போது, அடுத்த பாதிப்பு அந்நாட்டின் வங்கித் துறையில் நிகழும். ஏனென்றால், ரியல் எஸ்டேட் துறை வளர்ந்துவரும் சமயத்தில் அந்நாட்டு வங்கிகள் அத்துறைக்கு கடன்களை வாரி இறைத்திருக்கும்.

அத்துறை தேக்கத்தைச் சந்திக்கும் போது கடன்கள் திரும்பி வருவது நெருக்கடிக்கு உள்ளாகும். 2008ஆம் ஆண்டு அமெரிக்காவில் லேமன் பிரதர்ஸ் வங்கி திவாலானதற்கு இது அடிப்படை காரணமாக இருந்தது. அதேபோல், தற்போது சீனாவில் ரியல் எஸ்டேட் துறையின் தேக்கத்தால் வங்கிகள் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றன.

### மூன்று பிரச்சினைகள்:

2020 மார்ச் மாதம் கரோனா பரவல் தீவிரமடைந்த நிலையில் உலக நாடுகள் ஊரடங்கைக் கொண்டுவந்தன. தொற்று பரவல் குறையத் தொடங்கியதையடுத்து பெரும்பாலான நாடுகள் ஊரடங்கை தளர்த்தின. ஆனால், சீனா ஊரடங்குக் கட்டுப்பாட்டை இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக நீட்டித்தது. இதனால், அங்கு தொழிற் செயல்பாடுகள் முடங்கிய நிலையில், நாட்டின் பொருளாதாரம் தடுமாற்றத்தை சந்திக்கத் தொடங்கியது.

கொரோனாவுக்குப் பிறகு சீனாவில் மூன்று முக்கிய பிரச்சினைகள் தீவிரமடைந்தன. முதலாவது. ரியல் எஸ்டேட் துறையின் தேக்கம். இரண்டாவது உள்ளூர் அரசு நிர்வாகங்களின் கடன் சுமை வரலாறு காணாத அளவில் அதிகரிப்பு. மூன்றாவது, மக்களின் நுகர்வு சரிவு. சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இந்த மூன்று பிரச்சினைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

சீன சட்டப்படி, நில உரிமை சீன அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும். தனியாருக்கு நிலத்தின் மீது உரிமை கிடையாது. அரசிடமிருந்து அவை நிலத்தை குத்தகைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். சீன அரசுக்கான வருவாயில் நில குத்தகை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால், சீனா அந்நாட்டில் ரியல் எஸ்டேட் நிறுவனங்களை ஊக்குவித்தது. சீன வங்கிகள் ரியல் எஸ்டேட் துறைக்கு கடன்களை வாரி இறைத்தன.

மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கி அதிக எண்ணிக்கையில் குடியேறுவார்கள் என்ற கணிப்பில் ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் காணும் இட மெங்கிலும் அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டியெழுப்பின. ஆனால், எதிர்பார்த்த அளவில் அங்கு குடியேற்றம் நிகழவில்லை. 2022 நிலவரப்படி சீனாவில் 2.5 கோடி அடுக்குமாடி குடியிருப்புகள் காலியாக இருக்கின்றன. இது ஒட்டுமொத்த பிரிட்டன் மக்கள் குடியேறுவதற்கு போதுமானதாகும். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த சீன அரசு, இனியும் ரியல் எஸ்டேட் துறைக்கு வரைமுறையில்லாமல் கடன் வழங்கினால் அது பெரும் சிக்கலில் முடிந்து விடும் என்ற நிலையில், 2020ஆம் ஆண்டு கடன் வழங்கலில் புதிய கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தது.

இந்தக் கட்டுப்பாடுகள் காரணமாக பெரிய நிறுவனங்கள் எதிர்கொண்டுவந்த கடன் நெருக்கடி வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்தது. சீனாவின் மிகப் பெரிய ரியல் எஸ்டேட் நிறுவனமான எவர்கிராண்ட் தீவிர நிதி நெருக்கடியில் இருப்பது 2021 ஆம் ஆண்டு வெளிச்சத்துக்கு வந்தது. தற்போது கன்ட்ரி கார்டன் என்ற மற்றொரு பெரிய ரியல் எஸ்டேட் நிறுவனம் கடன் நெருக்கடியை எதிர்கொண்டிருப்பது தெரிய வந்துள்ளது.

ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு கடன் வழங்கிய நூற்றுக்கணக்கான சீன வங்கிகள் நெருக்கடியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. தவிர, ரியல் எஸ்டேட் துறையின் சரிவால் உள்ளூர் நிர்வாகங்களுக்கான வருவாய் குறைந்துள்ளது. இதனால் அவற்றின் கடன் சுமை இதுவரையில் இல்லாத அளவில் அதிகரித்துள்ளது.

### பணவாட்டம்:

ரியல் எஸ்டேட் துறையின் சரிவு மக்களின் நுகர்வையும் பாதித்துள்ளது. சீன மக்களின் சேமிப்பில் 60 சதவீதம் ரியல் எஸ்டேட் துறையில் சொத்துகளாக உள்ளன. அத்துறை தேக்கம் கண்டுள்ள நிலையில் மக்களின் சொத்து மதிப்பும் சரிந்துள்ளது. இதனால், மக்கள் பணத்தை செலவழிக்க தயக்கம் காட்டி வருகின்றனர்.

மக்களின் நுகர்வு குறைந்துள்ளதால், நிறுவனங்கள் உற்பத்தி செய்த பொருள்கள் தேங்கியுள்ளன. இதனால், விலைவாசி சரிந்துள்ளது. தொழிற் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதால்,வேலையின்மையும் தீவிரமடைந்துள்ளது.

அமெரிக்கா, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் தற்போது 'பணவீக்கம்' (Inflation) தீவிரமாக காணப்பட்டு வருகிறது. ஆனால், சீனாவில் 'பணவாட்டம்' (Deflation) காணப்படுகிறது. விலைவாசி உயர்ந்தால் அது பணவீக்கம். விலைவாசி சரிந்தால் அது பணவாட்டம். விலைவாசி உயர்வைப் போலவே விலைவாசி சரிவும் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கக் கூடியது.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மக்களின் நுகர்வு முக்கிய பங்கு வகிக்கிறது. அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் அந்நாட்டின் ஜிடிபியில் மக்களின் நுகர்வு 70 சதவீதமாக இருக்கிறது. அதுவே சீனாவில் மக்களின் நுகர்வு 38 சதவீதமாக இருக்கிறது. முதலீடு 50 சதவீதமாக இருக்கிறது. முதலீடுக்கு ஏற்ப நுகர்வு நிகழ வேண்டும். இல்லையென்றால், பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்பு ஏற்படும்.

கடந்த இருபது ஆண்டுகளில் சீனா கடன் திட்டங்கள் மூலம் முதலீட்டை மட்டுமே ஊக்குவித்து வந்துள்ளது. மக்களின் நுகர்வை அதிகரிப்பதில் கவனம் செலுத்தவில்லை. இதனால், முதலீடுக்கு ஏற்ப நுகர்வு நிகழவில்லை. தவிர, மக்களின் தனிநபர் வருமானமும் மேம்படவில்லை.

### வேறு சில சவால்கள்

ஆப்பிள், டெஸ்லா உட்பட உலகின் முன்னணி நிறுவனங்கள் தங்களது விநியோக தளத்தை சீனாவில் கொண்டுள்ளன. தற்போது சீனா பொருளாதார தடுமாற்றத்தை எதிர்கொண்டுள்ள நிலையில், சீனா தவிர்த்து இந்தியா உட்பட வேறு நாடுகளில் தங்களுக்கான விநியோக தளத்தை அமைக்கும் முயற்சியில் நிறுவனங்கள் இறங்கியுள்ளன. இது சீனாவுக்கு கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் மக்கள் தொகையும் குறையத் தொடங்கி இருக்கிறது. குறிப்பாக வேலைவாய்ப்பில் பங்கேற்கக்கூடிய 15 - 64 வயதுக்குட்பட்டவர்களின் எண்ணிக்கை குறைகிறது. வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இது சீனாவின் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக நாடுகளுடன் நேரடி வர்த்தகத்தை சாத்தியப்படுத்தும் வகையில் மாபெரும் உள்கட்டமைப்பு (Belt and Road Initiative) திட்டத்தை சீனா மேற்கொண்டு வருகிறது. இதற்காக ஆப்ரிக்கா, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட நிதி நெருக்கடியில் இருக்கும் நாடுகளுக்கு பெரும் தொகையை கடனாக வழங்கியுள்ளது. தற்போது அந் நாடுகளில் நிதி நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் அந்தக் கடன் திரும்பி வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

### உற்றுநோக்கும் உலகம்:

மூன்றாவது முறையாக அதிபராக பொறுப்பேற்றுள்ள ஜி ஜின்பிங் சீனாவை அரசியல் தளத்திலும் பொருளாதார தளத்திலும் உலகின் மையமாக தன்னை மாற்ற திட்டங்கள் வகுத்து வருகிறார். ஆனால், களச் சூழல் மிக மோசமாகிக் கொண்டிருக்கிறது.

தற்போதைய சரிவிலிருந்து சீனா எப்படி மீளப்போகிறது என்பதையும் அதன் முன் இருக்கும் சவால்களை எப்படி எதிர்கொள்ளப்போகிறது என்பதையும் உலகம் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது!

- இந்து -



# மாட்டின் சுகாதாரமும் பால் சுத்தமும்



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

பாலின் தரத்தை தீர்மானிப்பதில் மாடுகளின் சுகாதாரம் முக்கிய பங்காற்றுகிறது. மாடுகள் ஆரோக்கியம் தளர்ந்து காணப்படும் போது அது பால் உற்பத்தியைப் பாதிக்கிறது. பால் பழுதடைகிறது. அந்தப் பால் பல நோய்களை பரப்பும் காவியாக மாறுகிறது. இந்த முறை மாடுகளின் சுகாதாரம் எவ்வாறு பாலைப் பாதிக்கிறது எனப் பார்ப்போம்.

**1. மடியழற்சியும் அதன் பாதிப்பும் -**

பாலை உற்பத்தி செய்யும் மடியில்/முலைச் சுரப்பியில் ஏற்படும் நோய்த் தொற்றுதான் இந்த மடியழற்சி. மடியழற்சி ஏற்படும் போது பாலுற்பத்தி குறைவதோடு கடுமையாக இந்த நோய் ஏற்படுமாயின் மடி பாலை உற்பத்தி செய்ய முடியாமல் பட்டுப் போகும் நிலை தோன்றும். அத்துடன் மடியழற்சியை குணமாக்க கடும் மருத்துவச் செலவும் சுகாதார நடைமுறைகளும் தேவை.

மடியழற்சி ஏனைய முலைகளுக்கும் ஏனைய விலங்குகளுக்கும் பரவக் கூடியதால் கடும் ஆபத்தானது. பண்ணையின் பொருளாதாரத்தையே ஆட்டம் காண வைக்கக் கூடியது. வெளிநாடுகளில் மடியழற்சிக்கு தடுப்பூசிகள் உள்ளன. இலங்கை போன்ற நாடுகளில் வருமுன் காக்கும் வகையான நடைமுறைகளையே கடைப்பிடிக்க வேண்டும்.

**2. தொற்று நோய்களை தவிர்த்தல் -**

சில நோய்கள் பால் மூலம் பரவக்கூடியன. குறிப்பாக காச நோய், brucellosis எனும் கன்று வீச்சு நோய், கால்வாய் நோய் போன்றவற்றை குறிப்பிடலாம். கால்வாய் நோய் போன்றவற்றை தடுப்பூசிகள் மூலம் தடுக்க முடியும். காச நோய், கன்று வீச்சு நோய்கள் மனிதனுக்கும் பரவக் கூடியதாகையால் கடும் அவதானம் தேவை.

**3. மாடுகள் வாழும் சூழல்-**

மாடுகளின் தொழுவம் மற்றும் சுற்றுப்புறம் அசுத்தமாகவும், சேறு சகதியுடன் காணப்படும் போது பல நோய்கள் இலகுவாக தொற்றக் கூடும். இலங்கையின் உலர் வலயப் பகுதிகளிலுள்ள பெரும்பாலான தொழுவங்கள் நாட்கணக்கில் மாடுகளின் எரு ,சிறுநீர் நிறைந்து அகற்றப் படாமல் இருப்பதை காணமுடியும். இதனால் நோய்கள், குடற் புழுக்கள், நுளம்பு, ஈக்கள் பெருக வாய்ப்பு உள்ளது.

**4. சுத்தமான மாடுகள்-**

மாடுகள் சேறு சகதி இன்றி குளிப்பாட்டி சுத்தமாக இருக்க வேண்டும். மேலும் பால் கறக்க முன்னும் கறந்த பின்னும் மடியை கழுவி தொற்று நீக்கம் செய்ய வேண்டும். இதன் மூலம் பால் கறவையின் போது அழுக்குகளால் பால் கெடாமல் பார்க்க முடியும்.

**5. மாடுகளின் உடல் நிலை -**

மாடுகள் சரியாக உணவு உண்டு நோய்கள் அற்று இருக்க வேண்டும். சரிவர உணவு ,ஊட்டச் சத்துக்களை உண்ணாத மாடுகள் மெலிந்தும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தும் காணப்படும் போது பாலுற்பத்தி குறைவதோடு பாலின் தரமும் குறையும். மடியழற்சி போன்ற நோய்களின் போது somatic cells எனும் கலங்கள் அதிகரிக்கும். somatic cell count எண்ணிக்கை அதிகரிக்கும் பால் கொள்வனவின் போது நிராகரிக்கப்படுவதோடு நுகர்வுக்கும் தகுதியற்றதாகவும் மாறி விடுகிறது.

**6. பயன்படுத்தும் தண்ணீரின் அளவும் தரமும் -**

பாலில் 87-88% தண்ணீரே உள்ள நிலையில் தேவையான சுத்தமான தண்ணீர் கிடைக்கும் வகை செய்ய வேண்டும். அசுத்தமான தண்ணீர பல நோய்களைத் தர வல்லது. தண்ணீர் மாடுகளை குளிப்பாட்டவும், தொழுவத்தை கழுவவும் பயன்படுவதால் என்பதால் அங்கும் தேவையான சுத்தமான தண்ணீர் அவசியமாகிறது.

**7. மாடுகளின் மனநிலை -**

மாடுகள் நோய் மற்றும் ஏனைய புறக் காரணிகளால் அயர்ச்சிக்கு (stress) உள்ளாகின்றன. இதனால் பாலுற்பத்திக்கு தேவையான oxytosin, prolactin போன்ற ஓமோன்களின் அளவு குறைகிறது. இதனால் முடிந்த வரை அயர்ச்சியை குறைக்க வழி செய்ய வேண்டும். நோய்களை கட்டுப்படுத்த வேண்டும்.

**8. கால்நடை வைத்திய சேவையின் அவசியம்-**

தொடர்ச்சியான நோய்த்தடுப்பு முறை, சிகிச்சைகளை கால்நடை வைத்தியரிடம் பெற வேண்டும். நோய் முற்றும் வரை காத்திராமல் ஆரம்ப நிலையிலேயே மடி நோய் போன்றவற்றை கட்டுப்படுத்த வேண்டும். பொருத்தமான மருந்துகளை பாவிக்க வேண்டும். குறிப்பாக பாலின் மூலம் மருந்துகள் மனிதனை அடையாமல் தவிர்க்கும் படியான சிகிச்சைகள் மற்றும் நடைமுறைகள் அவசியம்.

**9. நோய்ப்பட்ட, தேவையற்ற மாடுகளைக் கழித்தல் -**

மடியழற்சி போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட சிகிச்சை பலனற்ற மாடுகளை கழிக்க வேண்டும்.

இப்படியாக மாடுகள் சார்ந்த காரணிகள் பால் உற்பத்தியையும் அதன் சுகாதாரத்தையும் பாதிக்கின்றன



(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது வேலை இழப்பு என்பது தனிப்பட்ட முறையில் அவர்களுடைய குடும்பத்தை கணிசமாகப் பாதிக்கும். அதேவேளையில் நாட்டின் பொருளாதாரத்திலும் அது பாதிப்பை ஏற்படுத்தும்.

இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் தகவலின்படி, மார்ச் 2023 இல் சுமார் 25,000 இலங்கையர்கள் இஸ்ரேலில் வசித்து வருகின்றனர். இதில் திறமையான மற்றும் திறமையற்ற தொழிலாளர்கள் மற்றும் வீட்டு பணியாட்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் அடங்குவர்.

அதிக சம்பளம், நல்ல பணிச்சூழல், புதிய திறன்களைக் கற்கும் வாய்ப்பு உள்ளிட்ட பல காரணங்களுக்காக இலங்கையர்கள் இஸ்ரேலில் பணிபுரிய விரும்பிச் செல்கின்றார்கள். இஸ்ரேலிய அரசாங்கம் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் இலவச மருத்துவம் மற்றும் கல்வி போன்ற பல சலுகைகளையும் வழங்குகிறது. போரினால், இந்த வாய்ப்புகளில் கணிசமான பாதிப்புக்கள் ஏற்படலாம்.

## அரசாங்கத்தின் அறிவிப்பு

இஸ்ரேலில் பணிபுரியச் சென்ற இரண்டு இலங்கையர்கள் குறித்த தகவல் இல்லை என ஏற்கனவே செய்திகள் வெளிவந்துள்



ளன. இது அங்கு பணிபுரியும் இலங்கையர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்களின் நிலை ஆபத்தானதாக - நிச்சயமற்றதாக இருப்பதை உறுதிப்படுத்துகின்றது.

இதனையடுத்து, இஸ்ரேலுக்கு பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலே அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்வாறு கூறினார்.

அத்துடன், தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு இஸ்ரேலில் உள்ள பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும், இஸ்ரேலில் இருந்து நாடு திரும்புவதற்கு விரும்பும் இலங்கைப் பிரஜைகளுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஆக, பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து இலங்கைக்கு நம்பிக்கையளித்த வெளிநாட்டு வேலை வாய்புக்கான ஒரு களம் மூடபபடுகின்றது. இது இலங்கைக்கு வரக்கூடிய அந்நியச் செலாவணியிலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். தனிப்பட்ட முறையிலும் குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கும் நிலை உள்ளது.

இருந்தபோதிலும் குறிப்பிடத்தக்க ஒரு தொகையினர் இஸ்ரேலில் பாதுகாப்பாக இருக்கின்றார்கள் என்பதும், அவர்களுடைய சேவை இஸ்ரேலுக்குத் தேவையானதாக இருக்கின்றது என்பதும் சாதகமான ஒரு அம்சமாகவே பார்க்க வேண்டும்.!

## என்ன செய்ய வேண்டும்?

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான போரின் எதிர்மறையான தாக்கங்களைத் தணிக்க இலங்கை அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுக்க முடியும் என பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். இது தொடர்பில் ஆராய்ந்து உரிய செயற்பாடுகளைக் காலந்தாழ்த்தாது முன்னெடுப்பதே அவசியம்.

பொருளாதாரத்தை பன்முகப்படுத்துதல்: இலங்கை அரசாங்கம் சுற்றுலா மற்றும் எண்ணெய் இறக்குமதியைச் சார்ந்திருக்காத வகையில் பொருளாதாரத்தை பல்வகைப்படுத்துவதற்கு செயற்பட வேண்டும். இது இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையேயான போர் போன்றவற்றினால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு மத்தியில் பொருளாதாரத்தை மேலும் நெகிழ்ச்சியடையச் செய்யும். பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் அது அவசியம்.

உள்நாட்டு சுற்றுலாவை ஊக்குவித்தல்: சர்வதேச சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியை ஈடுகட்ட இலங்கை அரசாங்கம் உள்நாட்டு சுற்றுலாவை மேம்படுத்த முடியும். இதில் சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களைத் தொடங்குவது மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவது ஆகியவை அடங்கும். அதனைவிட ஏனைய நாடுகளிலிருந்து வரக்கூடிய உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்கான திட்டங்களும் அவசியம். குறிப்பாக அண்டை நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கான திட்டங்கள் அவசியம்.

பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு ஆதரவு வழங்குதல்: இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நிதி மற்றும் பிற உதவிகளை வழங்க முடியும். இது வர்த்தகத் துறையில் உள்ளவர்களை தக்க வைத்து வேலை இழப்பைத் தடுக்க உதவும்.

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டும். இது முதலீடு மற்றும் சுற்றுலாவுக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்கும்.

இலங்கை அரசாங்கம் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்தின் நிலைமையை தொடர்ந்து கண்காணித்து, இலங்கையின் பொருளாதாரத்தில் மோதலின் எதிர்மறையான தாக்கங்களைத் தணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான யுத்தம் இலங்கையின் பொருளாதாரத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளது. போரினால் சுற்றுலாத்துறையில் சரிவு, எண்ணெய் விலை உயர்வு, வர்த்தகம் மற்றும் முதலீட்டில் இடையூறு மற்றும் பணவீக்கம் அதிகரித்தது.

பொருளாதாரத்தைப் பல்வகைப்படுத்துதல், உள்நாட்டு மற்றும் பிராந்திய சுற்றுலாவை ஊக்குவித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவை வழங்குதல் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேணுதல் போன்ற செயற்பாடுகளின் மூலமாக போரின் எதிர்மறையான தாக்கங்களைத் தணிக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க முடியும்.




(11ஈஆம் பக்கத் தொடர்ச்சி)

• கூடுதலாக குற்றத்தை உருவாக்கும் பல செயல்கள் தெளிவற்ற முறையில் மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளன. ”வேறொரு நபரின் மத உணர்வுகளை வேண்டுமென்றே புண்படுத்தும் நோக்கத்துடன்” (பிரிவு 16) அல்லது ”எந்தவொரு நபர்களின்மத உணர்வுகளை சீர்குலைப்பது, அவமானப்படுத்துதல் அல்லது மதத்தை அல்லது மத நம்பிக்கைகளை அவமதிக்க முயற்சிப்பது ஆகியவை இதில் அடங்கும்” (பிரிவு 17). இந்த பிரிவுகள் மனித உரிமைச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட வெளிப்பாட்டை உள்ளடக்கியதாக இருக்கும். பிரிவு 14, ‘கலவரத்தை ஏற்படுத்துவதற்காக தவறான அறிக்கையின் மூலம் தூண்டுதலைத் தூண்டுவது’ குற்றமாகும். ICCPR சட்டம் மற்றும் PTA உட்பட பிற சட்டங்களிலிருந்து எழும் நடைமுறைகள் மூலம் இந்த மொழி அதிகாரிகளால் துஷ்பிரயோகம் செய்யத் திறந்துள்ளது.

• பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை மத சமூகங்களுக்கிடையில் சர்ச்சைக்குரிய மதத் தலங்கள் தொடர்பான மோதல்கள் நடந்து கொண்டிருக்கும் சூழலில், சிறுபான்மையினரைச் சேர்ந்த நபர்களின் கருத்துகளை மௌனமாக்குவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பத்தின் அபாயத்தை உருவாக்குவதால் இந்த விதிகளில் “மதம்“ பற்றி மீண்டும் மீண்டும் குறிப்பிடப்படுவது கவலைக்குரியது.

## அளவற்ற தண்டனை

• இந்த வரைவு மசோதா, அதிகப்படியான மற்றும் தவறாக வரையறுக்கப்பட்ட குற்றங்களுக்கு நியாயமற்ற முறையில் அபராதம் மற்றும் ஒன்று, இரண்டு, மூன்று அல்லது ஐந்து ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனையை பரிந்துரைக்கிறது. ”இரண்டாவது அல்லது அதற்குப் பிறகு தண்டனை விதிக்கப்பட்டால், அத்தகைய சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் இரட்டிப்பாக்கப்படலாம்” என்றும் அது கூறுகிறது.

• மசோதாவின் 25-வது பிரிவு, “ஆணையத்தின் உத்தரவுகளுக்கு இணங்கத் தவறினால்“ அதாவது, 24 மணி நேரத்திற்குள் அத்தகைய உத்தரவுக்கு இணங்கத் தவறினால் அது குற்றமாகும். மேலும் அந்த நபரை ஒரு காலத்திற்கு மிகாமல் சிறைத் தண்டனைக்கு ஆளாக்கும். ஐந்து ஆண்டுகள் அல்லது ஒரு மில்லியன் ரூபாய்க்கு மிகாமல் அபராதம்.

இந்த மசோதாவின் பல விதிகள், தகவல் மற்றும் கருத்துச் சுதந்திரம் உட்பட நாட்டில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்தி ரங்களைப் பயன்படுத்துவதைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று ICJ கருதுகிறது. ஆன்லைன் பாதுகாப்பு ஆணையம் மற்றும் பிற நிபுணர்களின் அமைப்பு, நியமனம் மற்றும் செயற்பாடுகள், தண்டனைக்குரிய குற்றங்கள், தேவையற்ற மற்றும் நடுநிலையற்ற தண்டனைத் தடைகள் என குறிப்பிடப்படும் நடத்தையின் தெளிவற்ற மற்றும் மிகைப்படுத்தப்பட்ட வார்த்தைகள் ஆகியவை குறிப்பாக கவலைக்குரியவை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com



(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆபிரிக்க நாடுகளிடம் நாம் ஏன் ஜன நாயகத்தை எதிர்பார்க்கின்றோம்? கோரு கிறோம்?

இரண்டாவதாக, சந்தைகள். ஆபிரிக்கா சிறிய சந்தைகள் மற்றும் வர்த்தகப் பற்றாக் குறைகளால் பாதிக்கப்படுகின்றன. இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளும் தலா 1.4பில்லி யன் மக்களைக் கொண்ட சந்தையைக் கொண்டிருந்தாலும், ஆபிரிக்காவில் 1.2பில் லியன் மக்கள் தொகை 54 வெவ்வேறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆபிரிக் காவிற்குள் வர்த்தகம் மிகக்குறைவு, பெரிய வர்த்தகத் தொகுதிகள் மிகக் குறைவாக உள்ளதோடு பல வர்த்தகக் கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

சீனாவின், குவாங்டாங்கில் உற்பத்தி செய்து ஹீலாங்ஜியாங்கில் விற்கலாம், இந்தியாவில், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்து ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் தொலைவில் உள்ள காஷ்மீரில் விற்கலாம். ஆபிரிக்காவில், டோகோவில் உற்பத்தி செய்வதும், அருகிலுள்ள பெனின் அல்லது கோட் டி ஐவரியில் விற்பதும் கடினமாகும்.

ஆபிரிக்கா வர்த்தக மேம்பாட்டை நோக்கி நகர்ந்து தனியார் முதலீடுகளைத் தூண்டும் சூழலை உருவாக்க வேண்டும். தனித்து நிற்கும் சாதனமாக அல்லாமல், மேலும் சிறந்த தனியார் முதலீட்டிற்கான இடர்குறைப்பு கருவியாக அந்தஉதவிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

சுற்றுச்சூழலும் காலநிலையும் ஆபிரிக் காவுக்கு பசுமையாக செல்வதற்கும் செல் வத்தை உற்பத்தி செய்வதற்கும் ஒரு பெரிய வாய்ப்பை உருவாக்குகின்றன. இப்போது சூரியசக்தி அங்குள்ள மலிவான வளமா கும். காற்றாலையும் அங்கு கிட்டத்தட்ட மலிவானது.

இதனால், புதிய பசுமைச்சந்தைகளை வளரும் நாடுகளால் கைப்பற்ற முடியும். ஓலா, இந்திய உபெர், போன்ற நிறுவனங் கள் மின்சார ஸ்கூட்டர்களையும், கார்க ளையும், மின்கலங்களையும் உற்பத்தி செய்கின்றன. அந்நிறுவனங்கள் இந்த உற்பத்திகளால் போட்டியில் வெற்றி பெற முடியும் என்று நம்புகின்றன. அந்நிறுவ னங்களின் "டெஸ்லா ஃபார் தி பெஸ்ட், ஓலா ஃபார் தி ரெஸ்ட்" என்ற அற்புதமான, பிரசார முழக்க கோசத்தையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இறுதியாகக் கல்வி. மேம்பாட்டுத் துறையானது பாடசாலைக் கட்டடங்கள் போன்ற கல்வித்துறையின் வெளிப்புற அடையாளங்களில் கவனம் செலுத்துகிறது. ஆனால் உள்ளக மையத்தில் கவனம் குறைகின்றது. இது தவறான அணுகு முறையாகும்.

வியட்நாமானது தற்போது ஐரோப்பியர் கள் தமது மாணவர்களுக்காக செலவிடும் தொகையில் 10சதவீதம் ஒதுக்குகிறது. அத னால் இன்னும் சிறந்த முடிவுகளைப் பெறு வதற்கான நிலைமைகள் காணப்படுகின் றன. விசேடமாக டிஜிட்டல் கல்வி மற்றும் உயர் தொழில்நுட்பம் ஆபிரிக்காவின் கல்வித்துறையை மேம்படுத்துவதற்கான புதிய வழிகளை வழங்குகிறது.

## அனைவரையும் சென்றடைவோம்

21ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியை நோக்கி நகரும்போது, வறுமை வெகுவாகக் குறைந்துள்ளது என்பது நல்ல செய்தியா கும். கடந்த இரண்டு தசாப்தங்களில் உல களவில் தீவிர வறுமை அரைவாசியாகக் குறைந்துள்ளது.

ஆனால் மீதமுள்ள ஏழைகளை முன் னேற்றுவது கடினமானதாக இருக்கலாம். ஏனென்றால் அவர்கள் அனைவரும் ஆபி ரிக்கர்கள், பெரும்பாலானவர்கள் கிராமப் புறங்களில் வாழ்கின்றனர் மற்றும் பலர் கண்டத்தின் ஏழ்மையான, மிகவும் பாதிக் கப்படக்கூடிய பகுதிகளில் வாழ்கின்றனர்.

ஆபிரிக்காவின் சஹேல் பகுதியானது, உலகின் மிக உயர்ந்த மக்கள்தொகை வளர்ச்சி, பலவீனமான மாநிலங்கள், சிறிய வணிகம், தீவிரவாத ஜிஹாதி சித்தாந் தத்தின் ஒரு நல்ல பகுதி ஆகியவற்றுடன் வறண்ட இயற்கை நிலைமைகளை கொண்டிருக்கிறது.

கடினமான அபாயகரமான நிலைமை களைக் கலவையாகக் கொண்டிருக்கும், சஹேலில் வறுமையை எதிர்த்துப் போராடு வதற்கான ஒரு மூலோபாயத்தில் உலக ளாவிய சமூகம் ஒன்றிணைந்து உள்ளுர் அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.

ஏழை, கிராமப்புற உள்நாடுகளை எவ் வாறு திருப்பலாம் என்பதை வியட்நாம் வெளிக்காட்டியுள்ளது. போருக்குப் பின்னர் நான் வியட்நாமுக்குச் சென்றபோது, கிரா மப்புறங்களின் எல்லா இடங்களும் பசி யின் உச்சபட்சமாக இருந்தன. அதுமட்டு மன்றி வியட்நாம் உலகின் மிகப்பெரிய அரிசி இறக்குமதியாளராக இருந்தது.

ஆனால் வியட்நாம் தற்போது உலகின் இரண்டாவது பெரிய அரிசி ஏற்றுமதியா ளராகவும் இரண்டாவது பெரிய கோப்பி உற்பத்தியாளராகவும் உள்ளது.

வியட்நாமின் செய்முறையொன்று ரொக்கட் அறிவியல் அல்ல - நிலத்தின் தனியார் உரிமை, கிராமப்புற வீதிகள், விவசாயிகளுக்கான சிறு கடன்கள் மற்றும் அரசாங்கத்தின் ஆலோசனைச் சேவை ஆகியவற்றினால் ஏற்பட்ட விளைவு தான்.

மனித வரலாற்றில் முதன் முறையாக, ஒவ்வொரு மனிதனையும் வறுமையிலி ருந்து வெளியே கொண்டுவருவதற்கான வளங்கள், கொள்கைகள், திறன்களை நாம் பெற்றுள்ளோம்.

அதை எப்படிச் செய்ய முடியும் என்பதை ஆசியா முன்னுதாரணமாக வெளிக்காட்டி யுள்ளது. அது தரும் மகிழ்ச்சியே இந்தியா வின் மத்திய பிரதேசத்தில் நான் சந்தித்த பழங்குடியினரிடையே மிகவும் புலப்பட் டது. என்னைப்பொறுத்தவரையில் மனி தர்களும் இதையே அனுபவிக்க வேண் டும் என்று விரும்புகிறேன்.

**"எரிக் சொல்ஹெய்ம் காலநிலை மாற்றம் தொடர்பான இலங்கை ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகராகவும் சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டில் நன்கு அறியப்பட்ட உலகளாவிய பிரமுகராகவும் உள்ளார். அவர் 2005- 2012 வரை நோர்வேயின் சுற்றுச்சூழல் மற்றும் சர்வதேச மேம்பாட்டு அமைச்சராக பணியாற்றினார். அபிவிருத்தி உதவிக் குழுவின் தலைவராகவும் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் நிர்வாக இயக்குநராகவும் இருந்துள்ளார். தற்போது அவர் உலகவள நிறுவனத்தில் மூத்த ஆலோசகராகவும், ஒரேபாதை மற்றும் மண்டலம் முன்முயற்சி திட்டத்தின் பசுமை மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவராகவும் உள்ளார். இது அவர் முன்னணி நிலைத் தன்மை மற்றும் ஆற்றல் எழுத்தாளர் களின் எண்ணங் கள் மற்றும் கருத்துக்களை முன்வைக்கும் ஒரு ஜனநாயக தளமான illuminem Voices என்ற இணையத் தளத்திற்கு எழுதிய கட்டுரையின் தமிழாக்கமாகும்."**

# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -



முந்தி ஒருநாள் கொஞ்சம் காத்து கடுமையா வீச எங்கட முத்தத்தில நிண்ட வேப்பமரத்தில இருந்த கூட்டில இருந்து விழுந்த குருவிக்குஞ்சொண்டு முத்தத்தில கிடந்து கத்திக்கொண்டு இருந்தது.

தன்ரை தாயைத் தேடித்தான் அப்பிடி ஐயோ அம்மா ஓடியாணை ஓடியாணை எண்டு தன்ரை பாசையில கத்தி இருக்கும். அதைப் பாக்கச் சரியான பாவமா இருந்திச்சுது எண்டு நான் தூக்கியந்து தண்ணி தெளிச்சு தடவிக்கொண்டு இருக்கேக்கைதான் பாத்தன்.

அதுகின்ரை ஒரு கால் முறிஞ்சு கிடந்து.

வீட்டம்மாட்டைச் சொல்லி ஒரு பழந்துணியிலை மஞ்சளும் நல்லெண்ணையும் கலந்து எடுத்தரச் சொல்லிக் காலுக்கு கட்டிக்கொண்டிருக்கேக்கை எங்கட வீட்டில வந்திருந்த ஒரு சொந்தக்காறர் என்னத்துக்கு உந்தச்சொத்திக் குருவியைத் தடவி சொந்தம் கொண்டாடிறியள் பேசாமத்தூக்கி எறிஞ்சு போட்டு பாக்கிற வேலையைப் பாருங்கோ எண்டார். அவர் உப்பிடிச் சொல்லவும் நான் திடுக்கிட்டுப்போனன்.

சரியான கவலையாக் கிடந்துது. அவர் மட்டுமில்லை அவரைப்போல கன பேர் எங்கட சமூகத்தில உந்த ஊனம் எண்டதை ஒரு மாதிரியாகத்தான் பாக்கினம்.

ஊனமுற்றவர்களை மதிக்கிறதோ இல்லாட்டில் உதவி செய்யிறதோ கிடையாது. கன இடங்களில அவையை எடுத்தெறியிறது கூட. உண்மையில அப்பிடியான ஊனமுள்ள ஆக்கள் புறக்கணிக்கப்பட வேண்டிய ஆக்கள் இல்லை எண்டது கன பேருக்கு விளங்கிறேல்லை.

ஊனம் எண்டாப்போல அவைக்கு ஒண்டும் ஏலாது எண்டு அர்த்தம் இல்லை. அவையாலையும் எத்தினையோ விசயங்கள் ஏலும் எண்டு எங்கடை ஆச்சி நெடுகவும் சொல்லுறவ. அதாலதான் முந்திச் சொல்லுற மாதிரி அவையை வலதுகுறைஞ்சவை எண்டு சொல்லாம மாற்றாற்றல் உள்ளவை எண்டு இப்ப சொல்லுகினம்.

ஊனம் எண்டது பிறப்பில இல்லாட்டா போரிடரால, பேரிடரால ,பெருந்தொற்றால, வன்முறைகளால, விபத்துகளால ,சூழல் மாசால, போதைப்பயன்பாட்டால, தவறான சிகிச்சைகளால எண்டு பல காரணங்களால வரலாம்.

உதுகளால பல்வேறு உறுப்புகளும் இழக்கப்படலாம் இல்லாட்டில் செயல் இழக்கலாம்.

அது அவையின்ரை பிழை இல்லை.

உண்மையில அவை அவையின்ரை உடம்பில இருக்கிற ஒரு உறுப்போ இல்லாட்டில் சில உறுப்புகளோ தாங்கள் செய்ய வேண்டிய தங்கட வேலையைச் செய்யேலாம இருக்கிறதுதான் ஊனம் எண்டு எங்கடை அப்பு சொல்லுவார்.

உப்பிடிப்பாத்தா கண் இருந்தும் நல்ல விசயங்களை பாக்காதவ, காது இருந்தும் நல்ல விசயங்களைக் கேக்காதவை, வாயிருந்தும் நல்ல விசயங்களைப் பேசாதவை , கைகால் இருந்தும் வேலைவெட்டி செய்யாம சோம்பேறியா ஆற்றையும் உழைப்பில சீவிக்கிறவையும் ஒரு வகையில ஊனம் ஆனவைதான் எண்டுவார்.

அவர் இன்னும் ஒரு விசயம் திருவள்ளுவர் உள்ளத்தையும் உறுப்பு எண்டு அதாவது அகத்துறுப்பு எண்டு சொல்லுவார். உப்பிடிப்பாத்தா கெட்ட எண்ணம் கெட்ட சிந்தனையுள்ள மனச்சாட்சி இல்லாத மனுசத்தன்மை இல்லாத அன்பு இரக்கம் காதல் இல்லாதவையும் மனுசரை மதிக்கத் தெரியாததவையும் மற்ற ஆக்களைப் பற்றி தேவையில்லாம கதைக்கிறவையும் ஒரு வகையில ஊனமான ஆக்கள் தான் எண்டுவா ஆச்சி .

ஏனெண்டால் அவைக்கு திருவள்ளுவர் சொன்ன அந்த மனம் அல்லது உள்ளம் எண்ட உறுப்பு ஒழுங்கா வேலை செய்யாது இல்லாட்டில் வேலையே செய்யாது எண்டுவா .உதுமாதிரி சாதி சமய மொழி பிரதேச நிற பால் வயது வேறுபாடுகளை சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் எல்லாத்தையும் பெரிசு படுத்திறவையும் ஒரு வகையில ஊனமான ஆக்கள்தான். ஆக ஒட்டு மொத்தத்தில நாங்கள் எல்லாரும் ஒருவகையில ஊனமான ஆக்கள்தான் ஊனத்தின்ரை அளவுதான் ஆளாளுக்கு வித்தியாசப்படும் எண்டிற ஆச்சி உண்மையில உறுப்பிழந்து மனசிழந்து மறுகிப் போயிருக்கும் மறுவாழ்வுக்காக ஏங்கும் அன்புக்காக பாசத்திற்காக உதவிக்காக ஏங்கும் தங்களையும் மற்றையவர்கள் மனுசராக மதிக்கமாட்டினமா எண்ட அங்கீகாரத்துக்காக ஏங்கும் படிப்பதற்காக ஏங்கும் அந்த மனுசரை சக மனுசனாக மதிக்கிற பண்பை நாங்கள் எல்லாரும் வளக்கவேணும் எண்டுவா .

சமயத்தின்ர பேரில கடவுளின்ர பேரில பல விசயங்களை அது தேவையோ தேவை இல்லையோ செய்யிற நாங்கள் செய்யிறத்தை கடவுள் ஏற்கிறாரோ இல்லையோ கடவுளின் பிள்ளைகளாகிய இந்த ஊனமாகிப் போனவர்களுக்கு செய்யும் உதவி அவர்களுக்கு நாங்கள் குடுக்கிற மதிப்பு அங்கீகாரம் எல்லாம் அந்தக்கடவுளைப் போய்ச்சேரும் அவர் சந்தோசமா அதுகளை ஏற்றுக்கொள்ளுவார் எண்டது மட்டும் உண்மை எண்டிறது ஆச்சியின்ரை நம்பிக்கை.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.10.2023இல் வெளியிடப்பெற்றது.

# வேலை வாய்ப்பு

## வரி விளம்பரங்கள்




### அரச வேலைவாய்ப்பு

**பதவி:** முகாமையாளர்
**நிறுவனம்:** கிறிஸ்தவ பெண்கள் சிறுவர் இல்லம்
**பணியிடம்:** நல்லூர், யாழ்ப்பாணம்
**வயது:** 50 வயதுக்குட்பட்டவர்
**கல்வித்தகைமை:** க.பொ.த. (உயர்தரம்) அல்லது அதற்கு மேல்.
முன் அனுபவம்: சிறுவர் சம்மந்தமான பயிற்சி சிறுவரோடு வேலை செய்த/ நிர்வாகத்துறையில் வேலை செய்த ஆகக் குறைந்தது 2 வருட முன்னனுபவம்.
மொழித்திறன்: ஆங்கில / சிங்கள மொழியில் பேசும் வேலைசெய்யும் திறன் வரவேற்கப்படும்.
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**நேர்காணலுக்காகத் தொடர்புகொள்ளவும்:** 077 395 0460, 077 309 8839, 076 636 3307

---

**நிறுவனம்:** (Theepan Creation studio)
**பதவி:** வீடியோ எடிற்றர் (Video Editor)
**பணியிடம்:** யாழ்ப்பாணம்
**சுயவிபரக் கோவையை அனுப்புவதற்கு:** partheek33@gmail.com
**தகைமை:** குறைந்தது ஒரு வருடம் அனுபவம்
**பால்:** இருபாலாரும்
**சம்பளம்:** திறமைக்கு ஏற்பச் சம்பளம்
**முகவரி:** மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
**தொடர்புகளுக்கு:** 077 621 6741, 075 227 8354

---

**விற்பனையாளர் / காசாளர்**
**நிறுவனம்:** Kwality Meat Mart
**பணியிடம்** : கொழும்பு
**சம்பளம் - 35000/-** க்கு மேல் (**OT** மற்றும் Sales Incentive)
கொழும்பு மாவட்டத்துக்குள் உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
**வயது:** 18 - 60 வரை
அனுபவமுள்ளவர்கள் / அனுபவமற்றவர்களும்
**விண்ணபணங்களை அனுப்ப வேண்டிய ஈமெயில்:** kwalitymeatmart@gmail.com
**தொடர்புகளுக்கு:** 077 23 66 188

---

**சமையல்காரர்**
**தொடர்புகளுக்கு:** 0776290894

---

**பணியாளர்**
1.மேசன்
**சம்பளம்:** 2500/=
2.மேசன் உதவியாளர்
**சம்பளம்:** 2000/=
3. தச்சு வேலையாளர்
**சம்பளம்:** 2500 - 3500/=
4. தீந்தை பூசுபவர்
**சம்பளம்:** 2000 - 2500/=

---

**அனுகூலம்:** உணவு, தங்குமிட வசதி
**வேலை நேரம்:** 8.00 am - 5.00 pm
**தொடர்புகளுக்கு:** 0772100749

---

**பணிப்பெண்**
**பணியிடம்:** யாழ்ப்பாணம்
**அனுகூலம்:** உணவு, தங்குமிட வசதி
**சம்பளம்:** 35000/= - 40000/=
**தொடர்புகளுக்கு:** 0779974662

---

**பணியாளர்கள்**
**நிறுவனம்:** அரைக்கும் ஆலை
**பணியிடம்:** வத்தளை
**தொடர்புகளுக்கு:** 0752138996

---

**வேலை:** உதவியாளர்
**பணியிடம்:** நுகேகொடை
**வயது** : 25 - 35
**பால்** : ஆண்
**சம்பளம்** : பயிற்சியின் போது - 30000/= பின்னர் அதிகரிக்கப்படும்.
**அனுகூலம்:** உணவு, தங்குமிடம் இல வசம்
**வேலை நேரம்:** 7.00am - 6.00 pm
**தொடர்புகளுக்கு:** 0771475686

### அரச வேலைவாய்ப்பு

**முகாமைத்துவ உதவியாளர் MA 1-2**
**( 04 வெற்றிடங்கள் )**
இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை.
**மேலதிகத் தகவல்களுக்கு:** www.aerc.gov.lk
விண்ணப்ப முடிவுத் திகதி : 23.10.2023
முகவரி: இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை
977/18, கண்டி வீதி,
புலுகஹா சந்தி,களனி.
**தொடர்புகளுக்கு:** 011-2987860, 011-2987859, 011-2987857

---

**காசாளர்**
**நிறுவனம்:** கட்டுமானப் பொருட்களின் இறக்குமதி மற்றும் உற்பத்தி
**பணியிடம்** : வவுனியா, யாழ்ப்பாணம்
**விண்ணப்பிக்க வேண்டிய மின்னஞ்சல்:** recruitments@nvclgroup.com
**முகவரி** : இல - 70, K. Cyril C Perera Mawatha, கொழும்பு 13.
**முடிவுத் திகதி** : 25.10.2023

---

**களஞ்சிய மேற்பார்வையாளர்**
**நிறுவனம்:** கட்டுமானப் பொருட்களின் இறக்குமதி மற்றும் உற்பத்தி
**பணியிடம்:** வவுனியா, யாழ்ப்பாணம்
**விண்ணப்பிக்க வேண்டிய மின்னஞ்சல்:** recruitments@nvclgroup.com
**முகவரி** : இல - 70, K. Cyril C Perera மாவத்தை, கொழும்பு 13.
**முடிவுத் திகதி** : 25.10.2023

---

**பொருள் விபரப்பட்டியல் எழுதுனர்**
**நிறுவனம்:** கட்டுமானப் பொருட்களின் இறக்குமதி மற்றும் உற்பத்தி
**பணியிடம்:** வவுனியா, யாழ்ப்பாணம்
விண்ணப்பிக்க வேண்டிய **மின்னஞ்சல்:** recruitments@nvclgroup.com
**முகவரி:** இல - 70, மு. Cyril C Perera மாவத்தை, கொழும்பு 13.
**முடிவுத் திகதி:** 25.10.2023

---

**வேலையாட்கள்**
**நிறுவனம்:** கருவாட்டுக் கடை
**பணியிடம்:** யாழ்ப்பாணம்
**தகைமை:** சிங்களத்தில் உரையாடல்
**தொடர்புகளுக்கு:** 0772228312

---

**களஞ்சியக் காப்பாளர்**
**பணியிடம்:** திருநெல்வேலி
**தகைமை:** கணினி அறிவுள்ளவர்கள் A/L படித்தவர்கள்
**வேலை நேரம்:** முழு நேரம்
**தொடர்புகளுக்கு:** 077 009 0189

---

**பகுதிநேர வேலையாட்கள்**
**பணியிடம்:** திருநெல்வேலி
**தகைமை:** கணக்குகள்/ இருப்புகள் பார்ப்பதற்கு கணினி அறிவுள்ளவர்கள்
**வேலை நேரம்** : 4.30Pm-7.30pm
வேலை செய்பவர்களும், படித்துக்கொண்டிருப்பவர்களும் விரும்பத்தக்கது.
திருநெல்வேலியை அண்மித்த பகுதியிலிருப்பவர்கள் விரும்பத்தக்கது
**தொடர்புகளுக்கு:** 077 009 0189

---

**பணியாளர்கள்**
**நிறுவனம்:** குளிர்பானக் கடை
**பணியிடம்:** கொக்குவில்
**வயது:** 20-30 வரை
**பால்:** ஆண்
**முகவரி:** இல.300, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
**தொடர்புகளுக்கு:** 077 292 8623, 077 937 7073

# வேலை வாய்ப்பு

## வரி விளம்பரங்கள்




### பணிப் பெண்

**பணியிடம்:** யாழ் நகர்

03,05 வயதான இரு பிள்ளைகளைப் பார்ப்பதற்கு 35-55 வயதிற்குட்பட்ட தங்கி நின்று வேலை செய்யக்கூடியபெண்.

**தொடர்புகளுக்கு:** 075 498 5400, 077 937 0000, 075 988 1000

### விற்பனையாளர்

**நிறுவனம்:** புடவை மொத்த வியாபார ஸ்தாபனம்

**பணியிடம்:** கொழும்பு

**தகைமை:** கல்வித்தகைமை G.C.E. (A/L)

**முகவரி:** கெய்சர் வீதி, புறக்கோட்டை, கொழும்பு 11.

**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்.

**பால்:** ஆண்கள்

**அனுகூலம்:** தங்குமிட வசதி உண்டு.

45 வயதிற்கு உட்பட்டவர்களும் மலையகத்தவர்களும் விரும்பத்தக்கது

**தொடர்புகளுக்கு:** 077 3467255

### கணக்காளர்

**நிறுவனம்:** புடவை மொத்த வியாபார ஸ்தாபனம்

**பணியிடம்:** கொழும்பு

**தகைமை:** கல்வித்தகைமை G.C.E. (A/L)

**முகவரி:** கெய்சர் வீதி, புறக்கோட்டை, கொழும்பு 11.

**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்.

**அனுகூலம்:** தங்குமிட வசதி உண்டு.

45 வயதிற்கு உட்பட்டவர்களும் மலையகத்தவர்களும் விரும்பத்தக்கது

**தொடர்புகளுக்கு:** 077 3467255

### களஞ்சியப் காப்பாளர்

**நிறுவனம்:** புடவை மொத்த வியாபார ஸ்தாபனம்

**பணியிடம்:** கொழும்பு

**தகைமை:** கல்வித்தகைமை G.C.E. (A/L)

**முகவரி:** கெய்சர் வீதி, புறக்கோட்டை, கொழும்பு 11.

**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்.

**அனுகூலம்:** தங்குமிட வசதி உண்டு.

45 வயதிற்கு உட்பட்டவர்களும் மலையகத்தவர்களும் விரும்பத்தக்கது

**தொடர்புகளுக்கு:** 077 3467255

### உள்ளகக் கணக்காய்வாளர்

**நிறுவனம்:** நீர்வழங்கல் மற்றும் துப்புரவு மேம்பாட்டுத் திட்டம்

**பணியிடம்:** செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு கொழும்பு (திட்ட மாவட்டத்திற்கு அடிக்கடி பயணம் செய்தல் வேண்டும்)

**தகைமை:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இயைபுடைய துறையில் இளமாணிப் பட்டம்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்படும் இயைபுடைய துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமை

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்படும் கணக்கியல் துறையில் ஓர் இளமாணிப் பட்டம்

அல்லது

சமமான தகைமை

அல்லது

கணக்கியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன்

கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையில் குறைந்தபட்சம் 08 வருடங்கள் தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட இதற்குச் சமமான தொழில்சார் தகைமை, ஒரு இணை அங்கத்துவம் அத்துடன் இயைபுடைய துறையில் (கணக்காய்வுத் துறை) குறைந்தபட்சம் 08 வருடங்கள் தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

அகில இலங்கை அரசாங்க சேவையில் i/வகுப்பு அதிகாரி அல்லது இதற்கு நிகரான நிலைமை அத்துடன் III/II வகுப்பு பதவியொன்றில் குறைந்தபட்சம் 08 வருட கால அனுபவம்.

**வயது:** விண்ணப்ப இறுதித் திகதியில் 64 வயதுக்குட்பட்டவராக இருத்தல்

**சம்பளம்:** 2019/01ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றுநிருபம் அடிப்படையிலான சம்பளம்

**முடிவுத் திகதி:** 2023-10-27

**விண்ணப்பிக்கும் முறை:**

கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள், அனுபவம், கடந்த கால சேவைகள் தொடர்பிலான அனைத்து சான்றிதழ்களின் பிரதிகளுடன் அனைத்து சுயவிபரங்களையும் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கும் பதவியை" குறிப்பிடுதல் வேண்டும். அரச/கூட்டுத்தாபனத் துறை நிறுவனங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**

திட்டப் பணிப்பாளர்

நீர்வழங்கல் மற்றும் துப்புரவு மேம்பாட்டுத் திட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை,

ஜுபிளி போஸ்ட், நுகேகொட.

### முகாமைத்துவ உதவியாளர்

**நிறுவனம்:** Kurunegala plantations limited

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

**தகுதிகள் மற்றும் அனுபவம்:**

வெளி விண்ணப்பதாரர்கள்

G.C.E (O/L) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி நான்கு (04) பாடங்களுக்கான C சித்தியுடன்,

1. சிங்களம்/ தமிழ்/ஆங்கில மொழி

II. கணிதம் உட்பட.

G.C.E A/L பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலாவது (பொதுத் தாள் தவிர) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். E State/ Plantation Company இல் அனுபவம், ஆங்கிலத்தில் நல்ல அறிவு மற்றும் கணினி அறிவு ஆகியவை கூடுதல் தகுதிகளாக இருக்கும்.

உள் விண்ணப்பதாரர்கள்

G.C.E (O/L) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி, நான்கு (04) பாடங்களுக்கான C சித்தியுடன்,

I. சிங்களம்/ தமிழ்/ஆங்கில மொழி

II. கணிதம் உட்பட

(PL 3), அல்லது (PL1) பிரிவின் கீழ் நிரந்தர பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் சேவையை முடித்திருக்க வேண்டும்.

**சம்பளம்:**

MA 1-1-2016: ரூ. (27,910-10 x 300-7 x 350-4 x 495-20 x 660-48,540) (கூடுதலாக வாழ்க்கைச் செலவுக்கான கொடுப்பனவு).

கணக்காய்வு உதவியாளர் பதவி

**நிறுவனம்:** Kurunegala plantations limited

தமிழர் பொருளியல் வாரமலர் TAMILS ECONOMY
புதன்கிழமை
18.10.2023

# வேலை வாய்ப்பு

## வரி விளம்பரங்கள்

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
**தகுதிகள் மற்றும் அனுபவம்:**
வெளி விண்ணப்பதாரர்கள்
G.C.E (O/L) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி, நான்கு (04) பாடங்களுக்கான C சித்தியுடன்,
I. சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி
II. கணிதம்
G. C. E (A/L) தேர்வு குறைந்தது ஒரு பாடத்திலாவது (பொதுத் தாள் தவிர) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மற்றும் யுயுவு இல் இறுதித் தேர்வு.
கணக்காய்வு துறையில் அனுபவம் (அரசு தொழில்களுக்கு தொடர்புடையது) கணினி கல்வியறிவு, ஆங்கிலத்தில் நல்ல அறிவு மற்றும் தோட்ட மேலாண்மை அனுபவம் ஆகியவை கூடுதல் தகுதிகளாக இருக்கும்.
உள் விண்ணப்பதாரர்கள்
G.C.E (O/L) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி, நான்கு (04) பாடங்களுக்கான C சித்தியுடன்,
I. சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி
II. கணிதம் உட்பட
(PL3), (PL1) பிரிவில் நிரந்தர பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் சேவையை முடித்திருக்க வேண்டும்.
சம்பளம் : MA 2-1-2016: ரூ. (30,310-10 x 300-7 x 350-4 x 495-20 x 660-50,940) கூடுதலாக வாழ்க்கைச் செலவுக்கான கொடுப்பனவு.
**வயது:** 45 இற்குள்
**விண்ணப்ப முடிவுத் திகதி:** 24.10.2023
**அனுகூலம்:**
வருடாந்திர போனஸ்
பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்பு பணமாக்குதல்
சலுகை வட்டி விகிதத்தில் துன்பக் கடன்
செயல்திறனின் அடிப்படையில் கவர்ச்சிகரமான ஊக்கத் திட்டம்.
**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**
The Manager Human Resource & Administration, Kurunegala Plantations Limited,No 80, Dambulla Road, Kurunegala
**முடிவுத் திகதி:** 24.10.2023

### ஆசிரியர்
**நிறுவனம்:** மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு,தென் மாகாணம்
**பணியிடம்:** தென் மாகாண சபைக் குரிய சிங்கள, தமிழ், ஆங்கில பாடசாலைகள்
**நிகழ்நிலை விண்ணப்பங்களுக்கு :** www.psc.sp.gov.lk
**மேலதிக தகவல்களுக்கு:** www.psc.sp.gov.lk

### பணியாளர்கள்
**நிறுவனம்:** ஹாட்வெயர் அன்ட் ரிம்பர்
**பால்:** ஆண்
**முகவரி:** பலாலி வீதி, கோண்டாவில், C.T.B டிப்போ அருகாமை
**தொடர்புகளுக்கு:** 077 558 9254

### முகாமையாளர்
**நிறுவனம்:** பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
ஸ்ரீலங்கா மாநில தோட்டக்கூட்டுத்தாபனம்
**பதவி:** மேலாளர் (நிர்வாகம்/HR)
**தகைமைகள்:**
- வெளி விண்ணப்பதாரர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வளங்கள்/ வணிக நிர்வாகம்/ பொது நிர்வாகம்/ வணிக ஆய்வுகள்/ மேலாண்மை/ வணிகம்/ பொது மேலாண்மை ஆகிய வற்றில் இளங்கலை பட்டம்.
மற்றும்
தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம்
உள் விண்ணப்பதாரர்
1. வெளி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருத்தல் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை அனைத்து விவரங்களுடனும் மற்றும்
பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் மற்றும் அனுபவங்களின் நகல்கள் உறையின் மேல் இடது மூலையில் எழுதப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு செய்யப்பட்ட தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியை அடைய வேண்டும். விண்ணப்பங்கள். இறுதித் தேதிக்குப் பிறகு பெறப்பட்டவை நிராகரிக்கப்படும். மேலே.
2. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் பதவிக்கு பொருத்தமான பாடப் பிரிவில், கனிஷ்ட முகாமையாளர் (JM) பிரிவில் உள்ள பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்தல்.
**சம்பள அளவு:** மேலாண்மை சேவை சுற்றறிக்கை 02/2016 இன் படி MM 1-1- 2016 சம்பள அளவு ரூ. [53,175-10 x 1,375-15 x 1,910-95,575]
**வயது:** 22 - 45
உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது
**அனுகூலம்:**
உட்புற மற்றும் வெளிப்புற மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள வசதிகள்.
**ஆட்சேர்ப்பு நடைமுறை:** நியமன ஆணையத்தால் நியமிக்கப்பட்ட குழுவினால் நடத்தப்பட்ட கட்டமைப்பு நேர்காணலின் முடிவுகள்.
**கட்டமைப்பு நேர்காணல்:**
தொடர்புடைய கூடுதல் அனுபவம் 30 மதிப்பெண்கள்
தொடர்புடைய கூடுதல் தகுதிகள் 30 மதிப்பெண்கள்
மற்ற சாதனைகள் 15 மதிப்பெண்கள்
நேர்காணலில் செயல்திறன் 25 மதிப்பெண்கள்
**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி :**
தலைவர்
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 257,
சிறி தம்ம மாவத்தை
கொழும்பு 10
அரசு / மாநகராட்சி / சட்டப்பூர்வ வாரியங்களில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் துறைத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.
**விண்ணப்ப முடிவுத் திகதி :** 27.10.2023

### விற்பனை முகவர்
**பணியிடம்:** வத்தளை Piaggio Auto ஓட்டக்கூடிய Sales Rep
**வயது:** 45 வயதிற்குட்பட்டவர்கள்
**வேலை நேரம்:** காலை 8.00 மணி முதல் மாலை 5.30 வரை
சனிக்கிழமைகளில் மாலை 3.00 மணி வரை மட்டும்.
போயா மற்றும் ஞாயிறு நாட்கள் விடுமுறை வழங்கப்படும்.
கொழும்பு மற்றும் வத்தளையை அண்மித்தவர்கள் மட்டும்
**சம்பளம்:** 45000 + Commission
உணவு மற்றும் தங்குமிட வசதிகள் இல்லை
**மின்னஞ்சல்:** info@arkadia.lk
**தொடர்புகளுக்கு:** 076 8243198

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு
**1.குவைட் வேலைவாய்ப்பு**
வீட்டுப்பணிப்பெண்கள் - 600 - சம்பளம் 120KD

# வேலை வாய்ப்பு

## வரி விளம்பரங்கள்




வீட்டு சமையற்காரர்கள் - 25 - சம்பளம் 140KD

**2. சிங்கப்பூர் வேலைவாய்ப்பு**

வீட்டுப்பணிப்பெண்கள் சம்பளம் 550SGD + 80SGD

வீட்டு தாதிமார்கள் (பெண்கள்) சம்பளம் 900SGD + 140SGD

**3. மலேசியா வேலைவாய்ப்பு**

ரெஸ்டூரன்ட் குழுவினர்- 48 - சம்பளம் 1500RM

வீட்டு பணியாளர்கள் - 100 - சம்பளம் 1500RM

**4. ரொமேனியா வேலைவாய்ப்பு**

மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் -100- சம்பளம் 550 €

**நிபந்தனைகள்**

**வயது:** 21-42 வரை

**அனுகூலம்:** உணவு, தங்குமிடம், மருத்துவம் இலவசம்.

ஒப்பந்தக்கால முடிவில் நாடுத்திருபம்ப விமான டிக்கட்டு இலவசம்.

**வேலை நேரம்:** ஒரு கிழமைக்கு 06 நாட்கள், 12 மணித்தியாலங்கள் வேலை 02 வருட ஒப்பந்தக்காலம் புதுப்பிக்கக் கூடியது.

**தொடர்புகளுக்கு** : +94 112 980 797, +94 777 584973, +94 772520261

**முகவரி** :
Harrens Manpower
146/S-3, 2வது மாடி, பேர்ல் பார்க் கட்டிடம், நீர்கொழும்பு வீதி, வத்தளை.

**மின்னஞ்சல்:** harrencemanpower 1758@gmail.com

---

**உதவியாளர்கள்** (HELPERS)

**நிறுவனம்** : MALIBAN TRADERS (PVT) LTD

வயதெல்லை 18-40

குறைந்தபட்ச தகைமை க.பொ.த சாதாரண தர பரீட்சை

**சம்பளம்:** ரூபா. 35,000 - 40,000

**அனுகூலம்:** தங்குமிட வசதியுடன் சலுகை விலையில் உணவு வழங்கப்படும்.

**தகைமை:**
சுறுசுறுப்புடன் வேலைகளை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

**முகவரி:** MALIBAN TRADERS (PVT) LTD
இலக்கம் 261,பிரதான வீதி,
கொழும்பு - 11.

**தொடர்புகளுக்கு:** 076 803 5335

---

**விற்பனையாளர் (SALESMAN)**

**நிறுவனம்:** MALIBAN TRADERS (PVT) LTD

**பணியிடம்:** கொழும்பு - 11

அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

**சம்பளம்:** 57000 + ஊக்கத்தொகையாக 10,000 - 15,000 வழங்கப்படும்.

**முகவரி:** MALIBAN TRADERS (PVT) LTD
இலக்கம் 261,பிரதான வீதி, கொழும்பு - 11.

**தொடர்புகளுக்கு:** 0768 035 335

### பல்கலைக்கழக பதவி வெற்றிடம்

**நிறுவனம்:** ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

**பதவிகள்:**

1. நூலகர் பதவி
2. சிரேஷ்ட பேராசிரியர் பதவி
3. பேராசிரியர் பதவி
4. விரிவுரையாளர் பதவி தரம் I/II
5. விரிவுரையாளர் (நிரந்தரமாக்கப்படாத) பதவி
6. போதகர் பதவி தரம் II
7. போதகர் பதவி தரம் III
8. உதவிப் பொருளாளர் பதவி
9. உதவிப் பதிவாளர் பதவி
10. உதவிப் பதிவாளர் பதவி (ஒப்பந்த அடிப்படையில் )
11. தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( கட்புல செவிப்புல ) தரம் III

**மேலதிக தகவல்களுக்கு:** www.kdu.ac.lk

**விண்ணப்ப முடிவுத் திகதி:** 31.10. 2023

### வேலையாட்கள்

**களஞ்சியக் காப்பாளர்**

**நிறுவனம்:** Electronics காட்சியறை

**பால்:** ஆண்கள்

**சம்பளம்:** 45,000/= தொடக்கம் 55,000/=

**வயது:** 18 தொடக்கம் 50

முன் அனுபவம் தேவையில்லை

**மேலதிக அனுகூலம்:** EPF, ETF

**வேலை நேரம்:** 8:00 a.m. - 7:30 p.m. 25 வேலை நாட்கள்

**முகவரி:** மாபோல, வத்தளை.

**தொடர்புகளுக்கு:** 077 993 9246

---

**நிறுவனம்:** NSA Group of Company Private Limited

**பணியிடம்:** யாழ்ப்பாணம்

**தகைமை:** கணினி அறிவு, ஆங்கில அறிவு

**அனுபவம்:** ticketing, travel, visa consultant துறையில்

**முகவரி** : இல 197, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**விண்ணப்பிக்கும் முறை:** சுய விபரக்கோவையை 0212210599 எனும் இலக்கத்திற்கு whatsapp செய்யவும்.

**தொடர்புகளுக்கு:** 0212 210599, 07726 66429, 077 877 4838

---

**தொழில்நுட்பவியலாளர்**
**இயந்திர இயக்குனர்**

**நிறுவனம்:** ஆடைத் தொழிற்சாலை

**பணியிடம்:** மட்டக்குளி

**சம்பளம்:** தகுந்த சம்பளம் வழங்கப்படும்

**தொடர்புகளுக்கு:** 011 2521333, 075 7464518.

---

**கணக்காளர்**

**நிறுவனம்:** பாதணி தொழிற்சாலை

**பணியிடம்:** வத்தளை

**பால்:** இருபாலாரும்

**தொடர்புகளுக்கு:** 0112 939314, 0777 770423, 075 9770679.

---

**கணக்கு உதவியாளர்** & Data enty operators

**பணியிடம்:** கண்டி

**பால்:** இருப்பாலாரும்

**ஆண்:** வயதெல்லை (30 -50)

தகைமை மற்றும் அனுபவம்

கணனி துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு கண்டியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

**முழு சுய விபரக்கோவையை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்:** ambroseshelton@gmail.como

**தொடர்புகளுக்கு:** 077 3926621, 076 4409246

---

**கணக்கியல் உதவியாளர்**

**தகைமை:** க.பொ.த உயர்தரப் பரீட்சை சித்தி பெற்றிருத்தல்

கணக்கியல் துறையில் ஓரளவு தகுதி பெற்றவர்கள். அடிப்படை கணினி அறிவு

சிங்களம் மற்றும் ஆங்கிலம் சரளமாக வாசிப்பு மற்றும் எழுதும் திறன்கள்

**பால்:** பெண்

**வயது:** 20 - 35

**வேலை நேரம்:** திங்கள் - வெள்ளி 9.00 - 18.00 சனி: 9.00 - 14.00

**சம்பளம்:** நேர்முகத் தேர்வில் முடிவு செய்யப்படும்

**உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்புவதற்கு:** 0094 701566045

**மின்னஞ்சல்:** info@premier a wine .com

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

# தமிழர் பொருண்மியம் வார இதழினை பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்கள் பற்றிய விவரங்கள்

| | |
|---|---|
| யாழ்முற்றம் | - கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் |
| வி.செல்லத்துரை ஸ்ரோர் | - நல்லூர் தெற்கு, நல்லூர் |
| மஞ்சு களஞ்சியம் | - நாவலர் றோட், யாழ்ப்பாணம் |
| ஹரிகிருஷ்ணா | - கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் |
| சிவானந்தா கபே | - இல - 648, பருத்தித்துறைவீதி, நல்லூர் |
| ஏ.ஆர்.கே. Shop | - பருத்தித்துறை வீதி, மூன்றாம்கட்டை, கல்வியங்காடு |
| நகுலன் | - இல - 85, பருத்தித்துறைவீதி, நல்லூர் |
| இனியா தென்றல் புத்தகக் கடை | - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| நாதன் கபே | - நாவலர் வீதி, நல்லூர் |
| ஆசீர்வணிகம் | - கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் |
| உமா ஸ்ரோர் | - கே.கே.எஸ். வீதி, சிவன்கோவில், யாழ்ப்பாணம் |
| சிறிமகாமாரி | - கே.கே.எஸ். வீதி, இணுவில், யாழ்ப்பாணம் |
| வானம்பாடி | - சுழிபுரம் |
| வெண்பா புத்தகக் கடை | - யாழ். இந்துக் கல்லூரி அருகில் |
| பூபாலசிங்கம் புத்தகக் கடை | - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| Book Lap | - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் முன்பாக |
| ஜெகன் களஞ்சியம் | - இல - 447, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் |
| சிறி துர்க்கா பல்பொருள் வாணிபம் | - கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பளை |
| சஜீவன் பல்பொருள் வாணிபம் | - பிரதான வீதி, பண்டத்தரிப்பு |
| பிள்ளையார் ஸ்ரோர் | - மட்டுவில் மத்தி, சாவகச்சேரி |
| நியூ கஜானன் | - அல்லாரை வீதி, மீசாலை, சாவகச்சேரி |
| அருள்எம்மா | - இல - 505, பீச்றோட், குருநகர், யாழ்ப்பாணம் |